உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௨௮.] பிரமோதூத௵ ஆடி௴ [பகுதி-௯.

Vol. XXVIII. July-August 1930. No. 9.

## தமிழ்மக்கள் கடமை.

(மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையின், 21-ம் ஆண்டு நிறைவுவிழாவில் திருவனந்தபுரம் Retired High Court Judge ப்ரும்மஸ்ரீ K. G. சேஷையரவர்கள் அவைத்தலைவரா யிருந்து நிகழ்த்திய முன்னுரை).

*அருந்தமிழ் அறிந்த அன்பர்காள்!*

சீருஞ் சிறப்பும் கேள்வியும்பெற்ற பலர் குழுமிய இவ்வவையின்கண், தலைமைத்தானம்பெற எனக்குச் சற்றும் ஆற்றலின்மை வெளிப்படை. ஆயினும் என் அருமை ஆப்தரத்னங்களாகிய சிலர் என்னை இச்சபாபதித்தானத்திற்கு வற்புறுத்தி வேண்டினராகையால், நான் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, மெய்வருத்தம் பாராது இவண் வரத்துணிந்தேன். பிறைமுடிப்பெருமான் எறிகடல்குடித்த குறுமுனிக்கருளிய செந்தமிழ்மொழியின்பால் நானும் சற்றபிமானமுடையவனாகையால், நந் தமிழ்த்தாய்க்கு என்னாலியன்ற சிறுதொண்டு செய்ய இது ஓர் நல்ல தருணமெனக் கருதி, அவர்களின்விருப்பத்துக்கு மகிழ்வோடு நான் இணங்கினேன். இவ்வாறு செய்ததால் எனக்

குண்டாகக்கூடிய பெரியதோர் நயமும் என்னைத் தூண்டாநின்றது. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை வலியக் கிடைத்தால், அதை யாரே ஆசை மிகுந்து அங்கீகாரம்செய்யார்?

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"

என்று முன்னோர் மொழிந்திருப்பதையுன்னி, இவ்வாண்டு நிறைவுக் கொண்டாட்டத்திற்கு வரும் சீரியரின் நட்புப்பேறு அடைய இது தக்க சந்தர்ப்பமென்றும் நான் கருதினேன். முன்னாண்டுகளில், பண்டித சிகாமணி மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள் போன்ற கலைஞர்கள் அலங்கரித்த இம்மேன்மைத்தானத்தில், என்னை யேறச் செய்த உங்களன்பை நான் மிகவும் நன்றியோடு பாராட்டுகிறேன். ஆனால், அவைத்தலைவனாயிருந்து நான் நடத்தும் நடவடிக்கைகளுள் யாவேனும் குற்றங்குறைகள் ஏற்பட்டால், அவற்றைச் சீரியர்கள் சகித்தருள வேண்டுகிறேன்.

இன்று இச்சன்மார்க்கசபையின் 21-ஆம் ஆண்டுநிறைவுத் திருநாளாகும். உலகவழக்கப்படி இன்று இச்சபை இளமைப்பிராயம் நீங்கிப் புருஷப்பிராப்தியடையும் தினம். தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகத் திருவருட்பங்கால் ஏற்பட்டு நடந்துவரு மிச்சபை, இதுகாறும் தக்க பெரியோர்பலர் இங்குப்போந்து நடத்திய அரிய சொற்பொழிவுகளால் தன் நன்னோக்கத்தைப் பலவாறாகப் பூர்த்திசெய்துவந்துளது. இச்சபையின்சார்பாக நடைபெற்றுவரும் கலாசாலையும் நூல்நிலையமும் தமிழ்வளர்ச்சிக்கு உதவிபுரிந்துவருகின்றனவென்று அறிக்கைப்பத்திரங்களாற் காணக்கிடக்கின்றது. எதிர்காலத்தும் நம் தமிழ்மொழி மேன்மேற் பொலிவுஞ் சிறப்புமுற் றோங்கிச் செழிக்க, இச்சபை என்று மிடைவிடாதுழைத்து எல்லாநலங்களும் பெற்று வாழும்வண்ணம்,

"ஞானக் கரும்பின் றெளிவைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல

கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்தி"

மனமார வணங்குகின்றேன்.

சமீபகாலத்தில் நந்நாட்டில் தோன்றிய தேசியவபிமானவெழுச்சி யின்பயனுய்த தேசிய பாஷாபிமானமும் நந் தமிழ்நாட்டில் எங்கும் பாவிவருகின்றது. இதனால் நாட்டுக்கு விளையும் நலம் அளவிடக்கூடிய தன்று. பிறநாட்டார் ஆட்சியின் ஹேதுவாலும் பிறகாரணங்களாலும் பலவாண்டுகளாகத் தமிழ் தன்நிலையுஞ் சீரும் குன்றித் தளர்ந்து அலங் கோலமடைந்துநின்றதன்மை நாம் அறிவோம். தமிழை அக்கேவலகதி பற்றியது தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியை அநாதாவுசெய்துவந்தத னாலேயே என்று ஐயமறக் கூறலாம். ஆங்கிலத்திற்கிணையாக வேறு பாஷையொன்றுமில்லையென்று மனதார நம்பும் ஆங்கிலவாசாட்சியார், அம்மொழியைப் பரப்புதலாலேயே ஆங்கிலஸாம்ராஜ்யமுழுதும் மேம் பாடுறுமென்று நம்புதல் இயல்பு. அவர் நம்பிக்கை வலியுறும்வண்ணம் நம்மவர்கள் நந்நாட்டுப் பூர்வீகக் கலைகளையும் ஒழுக்கங்களையும் நம் மொழியிலமைந்த நூல்களையும் அவை புகட்டும் அரும்பெரும் போதனை களையும் அவற்றால் வளர்க்கப்பெற்ற தமிழ்நாகரீகத்தையும் வாளா குப்பையென விலக்கி ஆங்கிலத்தையே மகிழ்ச்சியோடு மார்புறவணைத்து நிறமொன்றைநீங்கலாக, பேச்சு நடை யுடை பாவனை யெல்லாவற்றிலும் ஆங்கிலேயராய் விளங்கமுயன்றார்கள். காலக்கிரமத்தில் ஆங்கிலங் கற் றோரும் அவர்களைப்பின்பற்றி அம்மொழி கல்லாதவர்களும் தாய்ப் பாஷைபேசுதல் பெரியதோர்குறைவும் சீர்கேடுமென நினைக்கத்துணிந் தார்கள். இப்போலி ஆங்கிலேயர், பிறவியில் தமிழரேயாயினும் தமிழை மதியாது கீழ்ப்படுத்தினராகையால் ஆங்கிலத் துரைத்தனத்தார் தமிழ் ப்பயனற்றமொழியெனக் கருதி அதைமேம்படுத்த முயலவில்லை. "தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு விதிவகையும்" என்ற வாதவூரடி களின்வசனம் நம்மவர் அறிந்திலர்போலும்.

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

என்னும் நாலடியார்வாக்கியத்தின் உண்மையை நாம் உணர்ந்திருந்த நாள் மிகப்பல. இப்பொழுதுதான் தேசபாஷையின்மீது ஜனங்கள் கொண்டிருந்த அனாதரவு மாறிவருகின்றது. இது ஒரு நற்சகுனம்.

ஒரு தேசத்தின்பாஷையே அத்தேசத்தின் ஜீவநாடியெனக் கூறலாம். இவ்வுண்மைபற்றியே ஆங்கிலத்தை இந்தியாவில் ஆணிவேரூன்றித் தழைக்கும்வண்ணம் அரசாட்சியார் தக்கவாறு ஆதரித்துவருகிறார்கள். பிறிதோர்நாட்டாட்சிக்குக் கீழ்ப்பட்ட நாடுகளில், ஆட்சிபுரிவோர் தம் பாஷையை எங்கும் பரவச்செய்து நாட்டுப்பாஷையை ஓட்டுவது சகசம். இராஜாங்கத்தின் ஆதரவுபெற்று அன்னியபாஷை கொஞ்சகாலத்திற்குப்பிறகு நாட்டுப்பாஷையை வழக்கத்திலில்லாமல் விலக்கி, நாட்டாரை அவ் வன்னியபாஷையிற் பேசவும் நினைக்கவும், அவ்வன்னியரது நடை யுடை பாவனை நோக்கங்களைத் தம்மவையென ஏற்று ஒழுகவுஞ் செய்துவிடும். அதனால், கீழ்ப்பட்ட நாட்டார் தம் தனிவாழ்க்கையை இழப்பார்கள். இது சரித்திரநூல்களாற் காணக்கிடக்கும் உண்மை. இறைவனருளால் தற்பொழுது தாய்ப்பாஷையின்மீது தமிழர்க்கு அபிமானம் நாளுக்குநாள் கூடிவருகின்றது. சங்கப்புலவர்களும் கவிச்சக்கரவர்த்தி கம்பர்முதலான கவிரத்னங்களும் கையாண்டு பரிசுத்தமாக்கின பாஷையைப் பேணிப் பாராட்டுவதில் நமக்கு நாணமேற்பட ஹேதுவில்லை. தமிழ் நம் அரும்பெறல் அன்னையென்ற ஞானம் நாடெங்கும் ஏறிவிட்டது. தமிழ்ப்பாஷையைக் கவுரவப்படுத்த வேண்டுமென்ற அவா ஊரெங்கும் வியாபிக்க ஆரம்பித்துவிட்டது. தாய்மொழிவாயிலாக நந்நாட்டிற் கல்விபயிலவேண்டுமென்ற கொள்கை எங்கும் வலியுற்றுவருகிறது. தாய்மொழிவாயிலாகப்பெறும் நூற்கேள்வியே நாட்டார் யாவர்க்கும் பயன்விளைத்து நாட்டிற்கு நிலைபெற்ற நலன் பெருக்கும். ஒரு ஜனசமுதாயத்திலடங்கிய ஒவ்வொருவரும் அதன் சர்வாங்கவளர்ச்சிக்கு அவரவரால் இயன்ற உதவிமுழுதும் புரிந்தாலன்றி, அச்சனத்தொகுதி சம்பூர்ண மேம்பாடடையாது. அவ்வாறாயின் சமுதாயத்தின் எல்லா வங்கத்தினர்களும் கல்விகற்று அறிவும் ஆற்றலுமடையவேண்டும். 'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றார் ஆன்றோர். கல்வியின்சிறப்பை நம்முன்னோர் எவ்வாறு மதித்தனர் என்பது, 'கல்வியழகே யழகு' 'நூற்கியைந்த சொல்லின்வனப்பே

வனப்பு' 'எண்ணோடெழுத்தின் வனப்பே வனப்பு' என்பனபோன்ற தொன்னூல்வாக்கியங்களால் அறியக்கிடக்கின்றது. ஜனசமுதாயத்தை ஓரியந்திரத்துக்கு ஒப்பிடலாம். இயந்திரத்தில், அதன் அம்சங்களாகிய சிற்றுணிகளும் துருப்பிடிக்காமல் சரியானநிலையிலிருந்தாலன்றி, இயந்திரம் செவ்வனே வேலைசெய்யாதன்றோ. அதுபோல, சமுதாயத்திலுள்ளோர் யாவரும் கற்றுத் தெள்ளறிவுபெற்றாலன்றிச் சமுதாயம் வலியும் பரிஷ்காரமும் அமையாது. 'களரனையர் கல்லாதவர்' 'விலங்கொடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரோ டேனையவர்' என்பன போன்ற ஆன்றோர்வசனங்களை இங்குக் கவனிக்கலாம். சமுதாய வளர்ச்சிக்குக் கல்வி அத்துணை யின்றியமையாததாயின், சமுதாயத்துளடங்கிய எல்லோரும் ஆங்கிலத்தின்வாயிலாகப் போதிய சால்படைதல் சாத்தியமா? தாய்ப்பாஷையான தமிழ்ப்பாஷையிற் கல்விபயிற்றலே நாட்டாரெல்லோர்க்கும் பயன்படும். அதுவே சமுதாயப் பொதுக் கிளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வழியாக்கும்.

தமிழ்ப்பாஷைவாயிலாக இக்காலத்திற் பயன்படும்வண்ணம் கல்வி பயிற்ற முடியாதென்று சிலர் ஐயுறுகின்றனர். அவரது சந்தேகம் பொருத்தமுடையதன்று. இக்கொள்கையாளர் முக்கியமாய்க் கூறும் தடை தற்காலக் கல்விமுறைக்கேற்ற புத்தகங்கள் தமிழிலில்லையாதலால் அக்குறை நீக்கப்பெற்றபிறகே தமிழைக் கல்விக்குக் கருவியாக்கக் கூடும் என்பதே. இவ்வாறுகூறுவோர் காரிய காரண நிகழ்ச்சிமுறை அறியாதவராவர். இவர் நீந்தத்தெரிந்தபின்னரே ஒருவன் நீரில் இறங்க வேண்டுமென்பாரை ஒப்பர். படிப்பவரின்றிப் பாடப்புத்தகங்கள் யாண்டும் எழுதப்பெறா. கல்விபயிற்றத் தமிழைக் கருவியாக வகுக்குமிடத்துப் பாடபுத்தகங்கள் அப்பாஷையில் விரைவில் வெளிவரும். இப்பொழுது தமிழில் தக்கபுத்தகங்களில்லாக்குறையை நீக்கவேண்டும் சுமை ஆங்கிலமும் தமிழுங் கற்று மேனாட்டுச்சாத்திரப்பயிற்சியுமடைந்த கலைஞர்மேலதாகும். தமிழ்மொழி தொன்றுதொட்டு இலக்கணமும் இலக்கியமும் பெரிதும்பெற்றுச் செம்மொழியாய்ப் பேச்சுவழக்கத்தில் நடைபெற்றுவருகின்றதாதலால், அதற்குக் காலோசிதம்போல ஆற்றலும் அகற்சியும் எளிதில் வருத்தலாம். "சேணிற்ப றக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திட்டேது தட்டேதுகாண்" என்று பாடினர் ஒரு

புலவர். இப்பொழுதும் நம் செம்மொழி, தட்டுத்தடையின்றி மேனாட்டு நவீனக்கலைகளையும் அறிவுநூல்களையும் தமிழ்மக்கட்குப் புகட்ட வல்லமைபெறும்படி தமிழ்நாட்டுக் கலைஞர்களும் சீமான்களும் 'பெயர் பொறிக்கும் பேராண்மை'யோடும் பாடுபடவேண்டும். இக்காலத்திற் கேற்றவாறு அறிவுவளர்ச்சிக்கும் செல்வப்பெருக்கத்திற்கும் வேண்டுவன வாகிய பல நூதன மேனாட்டுக்கலைகளை விளக்கும் நூல்கள் தக்க தேர்ச்சி யுடையாரால் தமிழில் எழுதப்பெறவேண்டுமென்று முன்கூறினேன். ஆரம்பத்தில் மறுமொழிகளிலுள்ள சாத்திரப்புத்தகங்களை எளியநடை யில் மொழிபெயர்த்தாற்போதும். பச்சிமநாட்டுச் சாத்திரங்களைத் தமிழில் எழுதப்புகுவோர் அந்தந்தச் சாத்திரங்களுக்குரிய பரிபாஷா பதங்களுக்குத் தமிழிற் பிரதிபதம் நூதனமா யமைக்கவேண்டுமென்று நினைப்பது தவறு. இவ்விஷயத்தில் ஜப்பானியர் மேனாட்டுமொழிப் பதங்களை அப்படியே எடுத்துத் தங்கள்பாஷைச்சொற்களாக வழங்கினர். நாமும் ஜப்பானியரைப்போலச் செய்வது உசிதமென்று நினைக்கிறேன். அவ்வாறுசெய்வதால் நம்பாஷைக்குக் குறைவொன்று மேற்படாது. சாத்திரங்களிற் பிரயோகிக்கும் சங்கேதக்குழூஉக்குறிகள் ஒருநாட்டார்க் குத் தனியாய் உரிமைப்பட்டனவல்ல; அச்சாத்திரங்கள் படிக்கும் எல்லாநாடுகட்கும் பொதுப்படவுரித்தாம பரிபாஷையாகும். "கடிசொ லில்லை காலத்துப் படினே" என்ற சூத்திரன்படி இவ்விஷயத்தில், பிற பாஷையிலுள்ள சாஸ்திர சங்கேதபதங்களைத் தமிழியற் சொற்களாகக் கொள்ளுதல் வழுவன்று.

தமிழில் இயற்கைச்சாத்திர நூல்கள்மாத்திரம் எழுதப்பெற்றாற் போதாது. நாட்டுச் சரித்திர நூல்களும், பிறநாடுகளின் சரித்திரம் விளக்கும் நூல்களும், அரசர், புலவர்பெருமக்கள் முதலானோர் சரித் திரங்களும், இலக்கியவிளக்க நூல்களும், அரசாட்சிமுறைநூல்களும், வாணிச்சியம்போன்ற ஊதியநெறிகளை விளக்கும் நூல்களும், நிகழ்கால வாழ்க்கைமுறையைத் தழுவி வரையப்பெற்ற சொற்சுவை பொருட் சுவையும் நூதன கற்பனாசமும் அமைந்த வசனநடை நூல்கள் நாடக நடைநூல்கள் செய்யுள்நடைநூல்கள்போன்ற நானாவித இலக்கிய நூல் களும் தமிழில் தோன்றவேண்டும் இதரமொழிகளில் விளங்கும் உலக மொப்பிய சிறந்த நூல்களைச் சுவைபொருந்த மொழிபெயர்த்துத் தமிழ்

மக்கட்கு உதவச்செய்தலும் ஒரு சிறந்த பணியாகும். தமிழ்ப்புத்தகங்கள் படிக்கும் வாசனை இப்பொழுது நம் மக்களுக்குள் பரவிவருகிறது. இத்தருணத்தில், ஜனங்களின் அறிவும் குணமும் பிறழாமல் மேன்மையடைய, இன்சுவையும் நலமுமிகுந்த அரிய வசனநடைப் புத்தகங்கள் வெளிவரவேண்டும். ஆனால், இப்பொழுது வெளிவரும் வசனநூல்கள் பலவும் எல்லோரும் சங்கோசமின்றி வாசிக்கப்படக்கூடியனவல்ல. அனேகம் இலக்கணவழுக்கள் நிறைந்தவையும் சுவையற்றவையும், உலகியலுக்கும் சன்மார்க்கத்திற்கும் மாறுபட்டவனவும், இளம்பிராயத்தினர்க்குமாத்திரமன்று, வயதுமுதிர்ந்தவர்க்குங்கூட விபரீதசீலமும் துர்ப்புத்தியும் விளைக்கக்கூடியனவுமாய் இருக்கின்றன.

தமிழ்மொழியிற் செய்யுள்வளமும் குன்றிவிடுமோமென்று அஞ்சக்கூடியகாலம் வந்துளது. தமிழிற்கென்று உழைப்பதே தமது பெருங்கடமையென்ற விருதத்தை மேற்கொண்டு பண்டைச் சங்கநூல்களைப் போற்றி உயிர்கொடுத்து உலவச்செய்துவரும் பண்டிதசிகாமணிகளின் அரும்பணியை நாம் எவ்வளவு புகழ்ந்துபேசினாலும் மிகையாகாது. அவர்கள் வெளிக்கொணர்ந்த பண்டை இலக்கிய நூல்களின் அமைப்பையும் வனப்பையும் கற்பனை விசேடத்தையும் சுவாபாவிகரமணீயத்தையும் கண்டு யார்தான் மகிழ்வுறார்? ஆனால் மிகச் சிலநூல்களைத் தவிர, சமீபகாலத்திற் செய்யுள்நடையிற் 'கேடில் விழுச்செல்வ'மெனத் தமிழ்நாடு கொண்டாடத்தக்க புதுநூல்கள் தமிழில் எழுதப்பெற்று வெளிவந்திருக்கின்றனவா? பண்டேற்பட்ட யாப்பியல் நிபந்தனைகட்குட்பட்டுச் சொல்லணிமாத்திரமுடையனவாய்த் தனிநலமும் சிறந்த மனோபாவமுமில்லாமல், முன் பெரியோரால் எழுதப்பெற்ற நூல்களின் எதிரொலியாக யாக்கப்பெற்ற செய்யுள்தொகுதிகளை ஸாஹித்யக்ருதிகளாக ஒப்பலாமா? அவைகளைக் கிரித்திரிம ரசனங்களாகவே மதிக்கவேண்டும். தமிழிற் காலநிலையை அனுசரித்துச் சிறந்த நோக்கங்களும் சமத்காரமும் உள்ளனவாய், பிரகிருதிரமணீயம் நிறைந்தன

வாய், கல்வி கேள்வி நிறைந்த தக்கோர்க்கு உள்ளக்களிப்புத்தருவன வாய் விளங்கும் சுவகபோல கற்பிதமான சிறந்த காவியங்கள் இயற்றக் கூடிய ஆற்றல்படைத்த கவிஞர்கள் இந்நாளில் இல்லாமற்போய்விட்ட னரா? அல்லது தக்க ஆதரவு பெருததால் அத்தகையர் வெளிவாரம லிருக்கின்றனரா? உலகமொப்பக்கூடிய மேன்மையான உல்லேகப் பிர சுரம்பெற்ற சாகித்யக்கிருதிகள்மாத்திரமே தமிழ்மொழிக்கு அழியா வனப்புத்தந்து அனவரதம் புகழ்பெற்று நிற்கத்தக்கனவாகும். நிற்க, அச்சேறிய சிறந்த நூல்களும் புலவர்கட்கே பயன்படுவனவாயிருக்கின் றன. தமிழ்நூற்பயிற்சிப் பள்ளிச்சிருரும் விரும்புவண்ணம் சிறந்த தமிழ்நூல்கட்கு உரை விசேடக்குறிப்புக்கள் முதலியனவடங்கிய அழ கான பள்ளிப்பதிப்புக்கள் வெளிவரவேண்டும். தமிழ்நாடெங்கும் தற் கால இயல்பிற்கேற்பப் பயன்பயக்கத்தக்க கல்விபாவுவதற்கு மேற்கூறி யவைபோன்ற பல பணிகள் செய்யவேண்டும். ஆனுல் அவைகளெல்லாம் செய்து முடித்தபின்னரே தமிழிற் கல்வி சாத்தியமாகுமென்று நினைப் பது, அலை ஓய்ந்தபின்னரே கடல்நீராடவேண்டுமென்று காத்திருத்தல் போலாகும் மனமுண்டேல் வழியுண்டு. நந்நாட்டிற் பொதுசனங் கட்குக் கல்விபயிற்றத் தமிழையே கருவியாகக்கொண்டு, கல்லூரிகளி லும் தொழிற்பாடசாலைகளிலும் மேனுட்டுச் சாத்திரங்களையும் மேனுட் டுக்கல்விமுறைகளையும் ஏறச்செய்வதில் இன்னுங் காலந்தாழ்த்தலாகாது. ஒவ்வொரு மக்கட்டொகுதியும் வையத்தின் பரிஷ்காரவளர்ச்சிக்கு இயன்ற உதவிபுரிந்து அதை விர்த்திசெய்யும் தொழிலில் தனியுரிமை யும் கடமையும் பூண்டுளது. அவ்வுரிமையையும் கடமையையும் செலுத்துவதற்கு, அவ்வம்மக்கள் இன்பிலும் துன்பிலும் யாண்டும் என்றும் குழவிப்பருவம்தொட்டு நினைத்தவும் அறிந்தவு மெல்லாம் அமைந்துள்ள தாய்மொழிவாயிலாற் ருெழிற்படுதல்போலப் பிறவாற் ருன் முடியாது.

தமிழரை உயர்த்தி, அவரிடம் இயற்கையிலேயே அமைந்துகிடக் கும் ஆற்றல்களைச் செவ்வனே கிளப்பி உலகம் மதிக்கும்வண்ணம்

உயிர்வாழ்ந்து ஓங்கிவளரச்செய்யவேண்டும்கடமை தமிழபிமானிகட்கும் விசேஷமாகத் தமிழ்ச்சங்கங்கட்கு முளது. 300 வருடங்கட்குமுன் ஓர்புலவர்க்கு,

"பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே"

என்று பாடமுடிந்தது. இப்பொழுது அத்தகைய பெருவள்ளல் யாரிருக்கிறார்கள்? இத்துர்த்தசையை ஒருவாறு தீர்க்கத் தமிழ்ச் சங்கங்கள் முயலவேண்டும். தமிழ்ச்சங்கங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி யாகவோ எல்லாம் ஒருங்குசேர்ந்தோ வேண்டியவாறு ஆலோசித்து அவ்வச்சபையின் ஆற்றல்போலத் தமிழ்க்கலாபிமானத்தை நாட்டிற் பரப்பவேண்டும். அப்பெரும்பணிசெய்யப் போதிய பணம்வேண்டுமே; அதற்கு என் நண்பர் காலஞ்சென்ற ஸ்ரீமாந். K. S. ஸ்ரீநிவாஸபிள்ளை யவர்கள் கூறிய வோருத்தி இங்குக் கவனிக்கற்பாலது. தமிழ்மக்களின் ஆகத்தொகை இரண்டுகோடியை எட்டுகின்றது. அவர்களுள் ஒவ்வொரு வரும் தமிழின் வளர்ச்சிக்கென்று தங்களாலியன்ற தொகையை அவர்கள் ஜன்மத்தில் ஒருதடவையிற் கொடுத்தால் சராசரி ஒருவர்க்கு ஒருரூபா வீதம் கிடைக்காதா வென்று அவர் கடாவுகிறார். இச்சூழ்ச்சியைக் கைக்கொண்டால் 200 லட்சம்ரூபா சிரமமின்றிச் சேர்க்கலாம். இவ்வளவு தொகை கிடைக்குமானால், அதன்வட்டியைக்கொண்டு நம் தமிழ்ப் பாஷையைப் பலவிதங்களில் வளர்க்கலாமன்றோ! பாஷாபிமானமுள்ள தனவைசியப்பிரபுக்கள்நிறைந்த இந்நாட்டில் தமிழின்விருத்திக்கென்று போதியபணம் சேர்த்தல் மேற்கூறிய மார்க்கத்தை நாடாமலே இலகுவா யிருக்குமென்பது என் பூர்ணநம்பிக்கை.

நான் இதுகாறும் சொல்லிவந்தவையெல்லாம், இச்சபையின் நோக்கங்களு ளொன்றாகிய தமிழ்மொழியை மிடல்பெறச்செய்து உரிய நிலையில் ஏற்றவேண்டுமென்பதைப்பற்றியேயாம். இச்சபைக்கு வேறொரு

சிறந்த நோக்கமு முளதென்று அறிக்கைப்பத்திரிகை விளக்குகின்றது. அதாவது : சைவநெறிபரப்பிச் சன்மார்க்கத்தைத் தழைக்கச்செய்தல். சைவமார்க்கத்தின் இலக்கணத்தை விளக்க எனக்குப் போதுமான வலி யில்லை. அன்றியும், இங்கு அதை விளக்கமுயல்வது மிகையேயாகும். மானிடப்பிறவிபெற்ற மக்கள் கல்விப்பேறும் செல்வப்பேறு முடையவ ராய் விளங்கினும் கடவுள்உணர்ச்சிபெற்று அதனால் விளையும் பேரின்பம் பெற்றிலரேல், அவர் தம் பிறப்பின் செம்பயன் அடைந்தவராகார் என்பது நம் பெரியோர்கருத்து. கல்வியிலும் செல்வத்திலும் தூநெறி சிறப்புடையதென்பதை வற்புறுத்துதற்கே இச்சபைக்குச் சன்மார்க்க சபையென்ற பெயர் சூட்டினர்போலும். சைவநெறிக்கு அடிப்படை யாய்நிற்பது அன்பு. 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்' என்பர் திருமூலர். அன்பும் மங்களமும் எல்லாவிடத்தும் பரவி, வையகமெல்லாம் துயர்தீர்ந்து நலம்பொலிந்துநிற்கச் செய்தலே சைவத் தின் சிறந்த நோக்கமாயிருக்கவேண்டும். இவ்வுண்மையைத் திருஞான சம்பந்தசுவாமிகள்,

"ஆழ்க தீயதெலாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே"

என்னும் தம் அருள்வாக்கால் உறுதிப்படுத்துகிறார். இம்மேலான தத்துவத்தைச் சைவநெறியில் ஒழுகுவோர் ஒருவிதத்திலும் மயக் குற்று மறக்கலாகாது. பலநூற்றாண்டுகட்குமுன் நந்நாட்டில்,

"............பேயிற்றுவல்லுயிர்ச்சாபம்
நலியும்நரகமும்நைந்தநமனுக்கிங்கியாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டுகொண்மின்"

என்று நம்மாழ்வார் மங்களாசாசனம்பண்ணினார். ஆனால், இற்றைக்கு நந்நாட்டிற் குற்றிருக்கும் கதியென்ன? எங்கும் பகையும் போட்டியும் போராட்டமும் அதிகரித்து மானிடவாழ்க்கைக்கு இடர் பல விளைத்து வருகின்றன. அந்நியோந்நியாச்சிரயத்தையும் பரஸ்பர சகாயத்தை

யும் அடிப்படையாகக்கொண்டு நெடுநாள் நந்நாட்டி லமைந்திருந்த சனாதனநெறியைவிட்டகன்று, தன்னலத்தையும் உரிமைவரிசையையும் ஆதாரமாகக்கொண்ட மேனாட்டு வாழ்க்கைமுறையை நம்மவர் சுவீகாரம் செய்துகொண்டனராதலால், இவ்விபரீதகதி நமக்கேற்பட்டது. ஆனால், இப்பொழுது சில வருடங்களாக மேனாட்டறிஞர்கள் பலர் அவர்கள் நாட்டிற் பௌதிகநலப்பற்றின்மீது உயர்த்திவந்த வாழ்க்கைமுறை அடிப்படையற்றுக் கோப்புக்குலைந்ததெனக் கருதுவாராய், ஆன்மீகநலம் பெருக்கி, எங்கும் சாந்திநிரப்பும் நம் சனாதன வைதிகமார்க்கத்தை மிக்க ஆவலுடன் கவனித்துவருகிறார்கள். இத்தருணத்தில் நாம் நந்நாட்டு வைதிகநெறியைக் கைப்பற்றி, அதன் தத்துவங்களை நன்குணர்ந்து, நாம் பிரவர்த்திக்கும் ஒவ்வொரு செயலினும் புழக்கம் விளைக்கும் போட்டியை விலக்கி, ஒருவருக்கொருவர் அன்னியோன்னியம் நிறைந்த சிந்தையராய் வாழ முயலவேண்டும். நாம் உரிமையே பாராட்டி நடந்தால், போட்டியும் சண்டையும் கிலேசமும் ஏற்படும்; நாம் கடமையைக்கருதித் தொழில்புரிந்தால், ஐக்கியமும், உறவும், உள்ளன்பும் விருத்தியாகும். இச்சன்மார்க்கசபையின் முயற்சியால், தமிழ்நாட்டில் நாளுக்குநாள் ஐக்கியபாவம் செழித்து, பொறாமைமுற்றும் அழிந்து, செந்நெறியில் எல்லோரும் சிறக்குமாறு, ‘கருநட்டகண்ட’னும் ‘திருநட்டமாடியை’த் தினந்தினம் வாழ்த்துவோமாக.

செந்தமிழ்ச் செல்வர்காள்! என் உரையை முடிக்கும் அமயம் நெருங்கியது. இச்செட்டிமார்நாட்டிற் பல்வேறிடங்களில் தமிழின் வளர்ச்சியைக் கருதித் தமிழ்ச்சங்கங்கள் பல நிறுவப்பெற்று நடந்து வருகின்றனவென்று நானறிகிறேன். அச்சபைகளுள் இச்சன்மார்க்க சபை முக்கியமானதென்றும், இதன் அங்கத்தினராய்ப் பல தனவைசியப் பிரபுக்களும் இயற்றமிழ்வல்லுநரும் விளங்குகின்றனரென்றும், அவர்களின் நன்முயற்சியால் இச்சபை மிக்க விருத்தியை அடைந்திருக்கிறதென்றும் நண்பர்கள்வாயிலாகக் கேட்டு மகிழ்வுற்றேன். இச்சபையும்

இதைப்போலத் தமிழின் அபிவிருத்திக்காக உழைக்கும் ஏனைய சங்கங்களும், தமிழபிமானிகளும், தமிழகமும், 'ஆயுந்தொறுந்தொறும் இன்பந் தருந்தமி'ழும் மேன்மேல்வளர்ந்து, மிக்க பெயரும் பெருமையுமடைந்து என்ஞான்றும் நலனும் பொலிவும் பெற்று ஓங்குமாறு முழுமுதலண்ணல் திருவருள்சுரப்பானாக.

"தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லா
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுதலுண்டோ"

என்னும் ஆன்றோர் அருள்வாக்கு அன்றுபோல் இன்றும் என்றும் மெய்வசனமாக விளங்கி நிலைநிற்க, "அன்பினுள்ளாகி யமரும் அரும் பொருளி"ன் ஆரருள் திருவுளம் உண்டாகும்வண்ணம்,

"கரும்பினுமினியான் றன்னைக்
காய்கதிர்ச்சோதியானை
இருங்கடலமுதந் தன்னை
யிறப்பொடுபிறப்பிலானைப்
பெரும்பொருட்கிளவியானைப்
பெருந்தவமுனிவரேத்து
மரும்பொனைநினைந்து நெஞ்ச
மாரநாம்போற்றுவோமே."

கே. ஜி. சேஷையர்.

---

# புறநானூற்றுக்குறிப்பு.

தமிழ் லெக்ஸிகனுபீஸ் உதவிப்பதிப்பாசிரியர்
ப்ருஹ்மஸ்ரீ P. S. சுப்பிரமணிய சாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள்

எழுதுவது.

(உ) மண்டிணிந்தநிலனும்
நிலனேந்தியவிசும்பும்
விசும்புதைவருவளியும்
வளித்தலைஇயதீயுந்
தீமுரணியநீருமென்றாங்
கைம்பெரும்பூதத்தியற்கைபோலப்
போற்றார்ப்பொறுத்தலுஞ்சூழ்ச்சியதகலமும்
வலியுந்தெறலுமளியுமுடையோய்
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
வானவரம்பனைநீயோபெரும
வலங்குளைப்புரவியைவரொடுசினைஇ
நிலந்தலைக்கொண்டபொலம்பூந்தும்பை
யீரைம்பதின்மரும்பொருதுகளத்தொழியப்
பெருஞ்சோற்றுமிகுபதம்வரையாதுகொடுத்தோய்
பாஅல்புளிப்பினும்பகலிருளினு
நாஅல்வேதநெறிதிரியினுந்
திரியாச்சுற்றமொடுமுழுதசேண்விளங்கி
நடுக்கின்றிநிலியரோவத்தையடுக்கத்துச்
சிறுதலைநவ்விப்பெருங்கண்மாப்பிணை
யந்தியந்தணருங்கடனிறுக்கு
முத்தீவிளக்கிற்றுஞ்சும்
பொற்கோட்டிமயமும்பொதியமும்போன்றே.

இச்செய்யுளில் தொடக்கத்திற் பஞ்சபூதங்களைப்பற்றிக் கூறுகையில் விசும்பின்பின்னர் வளியையும், வளிபின்பின்னர்த் தீயையும், தீயின்பின்னர் நீரையுங் கூறிய முடிநாகராயர் நிலனை நீரின்பின் வையாது அதனைத் தொடக்கத்திலேயே ஏன் கூறினர் எனச் சிலர்மனத்தில் ஐயந் தோன்றலாம். அவ்வையத்திற்குக் காரணம், அவை ஆகாசம், வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி* என்ற முறையானே வேதங்களிற் கூறப்பட்டமையே யாகும். ஆகாசம் குறிப்பாற் சூனியப்பொருளையுணர்த்தும் என்பது கவிமரபாதலானும், இச்செய்யுளில மன்னன் நீண்டகாலம்

* ஆகாஶாத்வாய:, வாயோரக்நி:, அக்நேராப:, அத்ப்ய: ப்ருதிவீ. (தைத்திரீயோபநிஷத். 2. 1)

நிலத்தைப்போல் அசைவின்றி வாழ்க என்று கூறப்படவேண்டுமாதலானும், நிலனை முன்னர்க்கூறினர் என்னலாம்.

நிலன், விசும்பு, வளி, தீ, நீர் இவற்றிற்கும் அரசனுக்கும் பொதுத்தன்மை முறையே பொறுமை, சூழ்ச்சி, வலி, தெறல், தண்மை என்பன. நிலன், அதன்மேல் எவர் எக்குற்றத்தைச் செயினும் பொறுத்துநிற்கின்றது. ஆகலினே அதற்கு 'க்ஷமா' என்று ஒரு பெயர் வடமொழியில் வழங்குகின்றது; அரசன் பகைவாது சிறுபிழைகளையெல்லாம் பொறுப்பான். விசும்பு உலகம்முழுதுஞ் சூழ்ந்துள்ளது; அரசன் மிக்க மந்திராலோசனையுள்ளவன். காற்று உடல்வலியுள்ளது; அரசன் உடல்வலி, படைவலி, மனவலி இவையுடையவன். தீ வெப்பமுடையது; அரசன் அழிக்குங் கோபமுடையவன். நீர் இனிமையானது; அரசன் இனிமையாய் அருள்புரிவன்.

13, 14, 15, 16 அடிகளிற் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் பாரதப்போரிற் பெருஞ்சோறு அளித்தனன் எனக் கூறப்பட்டது. உரையில் 'இருபடைக்கும்' அளித்தனன் என்று உரைக்கப்பட்டது. இருபடைக்குங் கொடுத்தனனோ? அல்லது பாண்டவர்பக்கல்நின்று அவர் படைக்குமாத்திரங் கொடுத்தனனோ? என ஆராயற்பாலது. 'ஒழிய என்ற சொல்லை நோக்கின் பாண்டவர்பக்கலே இருந்தானோ என ஐயமுண்டாகிறது. முடிநாகராயர் அந்நான்கு அடிகளிலுங் கூறிய முறையை நோக்கின் பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் பாரதப்போர் நிகழ்ந்தகாலத்தில் வாழ்ந்தனன் எனத் தோற்றுகின்றது. ஆயினுஞ் சில பெரியோர் அரசர்களைப் புகழும்போது அவர் முன்னோர்செய்த செயலாற் புகழ்வது வழக்கம் என்கின்றனர். அஃது ஆராயற்பாலது.

'நாஅல்வேதநெறிதிரியினும்' என்று ஆசிரியர் உரைத்தலின் ஆரியர்கள் தென்னாட்டுக்கு வந்து வைதிகமார்க்கத்தை நிலைநிறுத்தியபின்னரே இப்பாட்டுப் பாடப்பட்டிருத்தல்வேண்டுமென்பது வெளிப்படை. நாஅல்வேதமும் 'ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வணவேதம்' என்பனவேயாகும். நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்பாயிரவுரையில் நான்மறை என்பதற்கு, தைத்திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமும்' என்று உரைத்தது நேரிதன்று; ஏனெனில், தலவகாரம் ஸாமவேதத்தின் ஒரு சாகையாதலானும், தைத்திரியம் யஜுர்வேதத்தின் ஒரு சாகையாதலானும், பௌடிகம் என்பது பாஹ்வ்ருச்யம் என்பதின் தற்பவமாய் ருக்வேதத்தைக் குறித்தலானும் என்க.

22, 23, 24 ஆவது அடிகளிற் பொதியத்தில் அந்தணர் முத்தீயில் ஹோமஞ்செய்வது கூறப்பட்டுளது. அதனால் ஆரியர்கள் வானப்பிரஸ்தாச்சிரமத்திற் பொதியத்திற்குச் சென்று ஹோமாதிகள் செய்து கொண்டிருந்தனர் என்பது விளங்கும். ஏனெனில், முத்தீயில் ஹோமாதிகளைச்செய்ய உரிமை கிருஹஸ்தர்களுக்கும் வானப்பிரஸ்தர்களுக்குமே. கிருஹஸ்தர்கள் நாட்டில் வாழ்ந்து, பிரமசாரி, ஸந்நியாசி முதலியோரைக் காப்பாற்றவேண்டியவராயினமையின் அவர்கள் மலையிற் போய் வாழ்வது நேரிதன்று. 'முத்தீ' என்பது 'த்ரேதாக்நி:' என்றதன் மொழிபெயர்ப்பு. அவை கார்ஹபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணாக்கினி என்பன. கார்ஹபத்தியம் என்பது யாகசாலையின் நடுவில் எப்போதும் அணையாது போற்றப்படும் அக்கினி. அதற்குக் கீழண்டையில் உள்ளது ஆஹவநீயம்; தென்புறத்துள்ளது தக்ஷிணாக்கினி. ஆஹவநீயத்திலும் தக்ஷிணாக்கினியிலும் ஹோமஞ்செய்யவேண்டிய காலத்திற் கார்ஹப்பத்தியத்திலிருந்து அவற்றிற்கு அக்கினியை எடுத்துக்கொண்டுபோவது வழக்கம்.

ஈண்டுக் 'கடன்' என்ற சொல் 'ருணம்' என்ற சொல்லின் மொழிபெயர்ப்பு. பிராம்மணர்களுக்கு ருணம் ருஷிருணம், தேவருணம், பிதிருருணம் என மூவகைப்படுமென்றும், ருஷிருணம் வேதமோதுதலானும், தேவருணம் யாகஞ்செய்தலானும், பிதிருருணம் மக்களைப் பெறுதலானும் நீங்குமென்றும் வேதங்கள்முதற்* பலநூல்களும் உரைக்கின்றன. ஈண்டுக் குறிக்கப்பட்ட ருணம் 'தேவருணம்' ஆகும். ஆகவினாற்றான் இந்நூலுரையாசிரியர் 'செய்தற்கரியகடனாகிய' என்பதன் பின்னர் ஆவுதியை என வருவித்துக் கூறினர்.

'வானவரம்பனை' என்பதனை விளியாகக்கொண்டனர் இந்நூலுரைகாரர். அவ்வாறாயின் அதற்குப் பிரதியாக 'வானவரம்ப' என்றிருத்தல் வேண்டும். 'அண்மைச்சொல்லிற் ககாரமாகும்' (தொல். சொல். 131.) என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருத்தலின். அன்றியும்,

---

*ஜாயமாநோ வை ப்ராஹ்மணஸ் த்ரிபிர் ருணவா ஜாயதே। ப்ரஹ்மசர்யேண ருஷிப்ய:, யஜ்ஞேந தேவேப்ய:, ப்ரஜயா பித்ருப்ய: ॥ (தைத்திரீய ஸம்ஹிதை).

'முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானு மல்லது இறக்கப்படாமையின்' என்றார் பரிமேலழகரும்.

முன்னிலைப்பெயர் விளியேலாமையின் 'வானவரம்பனை' என்பதை முன்னிலையொருமைவினைக்குறிப்பாகக் கொள்ளலாமெனத் தோற்றுகின்றது. 'உடையோய்,' 'கொடுத்தோய்' என்பவற்றை 'உடையான்' 'கொடுத்தான்' என்பவற்றின் விளியாகக்கொண்டு*, போற்றூர்ப் பொறுத்தல் முதலிய குணங்களையுடையோனே, நன்னாட்டுப் பொருந, நீ வானவரம்பனை; பெரும, பெருஞ்சோற்றுமிகுபதங்கொடுத்தோனே, இனி, நீ நடுக்கின்றி நிலியர் என்று வினைமுடிவு செய்யலாம். அவ்வாறு கொள்ளின் 'நினக்கு நற்குணங்களோடு நன்னாடுஞ் செல்வமு மிருக்கின்றன; கொடையும் இருக்கின்றது; ஆகலின் நடுக்கின்றி நீடுவாழ்வை, இறைவன் அருள்புரிவாராக' என முடிநாகராயர் கூறியதாகும்.

'பொருதுகளத்தொழிய...கொடுத்தோய்' என்ற தொடர் 'குளம் நிறைய (நிறையும்வரை) மழைபெய்தது' என்றது போன்றது.

'நீ நிலியர்' என்றவிடத்து நிலியர் என்ற வியங்கோள் முன்னிலையில் வந்திருப்பது நோக்கத்தக்கது. வியங்கோள் தன்மையிலும் முன்னிலையிலும் வாராது என்று ஆசிரியர் தொல்காப்பியனார் 'அவற்றுள்—முன்னிலை தன்மை யாயீரிடத்தொடு—மன்னாதாகும் வியங்கோட் கிளவி' (தொல். சொல். 226) என்ற சூத்திரத்திற்கூறியிருக்க, ஈண்டு முன்னிலையில் வந்திருத்தலின், அது பிற்காலத்து வழக்கென்பது திண்ணம். வியங்கோள் எல்லாவிடத்தும் வருமென்பதைக் 'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்—இயலு மிடம்பா லெங்கு மென்ப' (நன். 338) என்றசூத்திரத்தில் நன்னூலார் கூறியது காண்க. ஆகலின் இச்செய்யுள் தொல்காப்பியர்காலத்துக்குப்பின்னர்ச் செய்யப்பட்டிருத்தல்வேண்டும்.

'குளிக்கு நாடு' என்றவிடத்து குளிக்கும் என்ற பெயரெச்சம் 'நிலனும் பொருளும்....செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே' (தொல். சொல். 234) என்ற சூத்திரத்தால் நாடு என்பதனைத் தழுவிற்று எனல் அமையினும் 'குளிக்குநாடென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்து மேல்நின்றது' என உரைகாரர்கூறியது நிலத்தைத்தழுவுஞ்செய்யுமென் எச்சம் எல்லாம் அத்தகைய வென்பதைக் குறித்தற்கு என்னலாம்.

இச்செய்யுளில் 'ஐம்பெரும்பூதம்,' 'முத்தீ,' 'கடன்' என்பவை முறையே 'பஞ்சமஹாபூதம்', 'த்ரேதாக்நி:', 'ருணம்' என்பவற்றின் மொழிபெயர்ப்பு. 'அந்தி' என்பது ஸந்த்யா என்பதின் தற்பவம்.

[தொடரும்.]

* 'உடையான்' என்பது 'தொழிலிற் கூறு மானென் னிறுதி—யாயா கும்மே விளிவயி னான' (தொல். சொல். 133) என்ற சூத்திரத்தால் 'உடையாய்' என்றாகி, 'ஆவோ வாகும் பெயருமா ருளவே' (தொல். சொல். 195) என்ற சூத்திரத்தால் உடையோய் என வாயிற்று.

# உந்தீற்று வினைச்சொல்.

செந்தமிழ்ப்பத்திரிகை (XXVIII. VI) உ௮-ம் தொகுதியின் ௬-வது பகுதியில் சென்னை: தமிழகாதிச்சாலை உதவிப்பதிப்பாசிரியர் திரு. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள் தொல்காப்பியச் சூத்திரமொன்றினைக் குறித்து எழுதிய நூதனவாராய்ச்சியைப் பலருங் கண்ணுற்றிருக்கலாம். அவ்வாராய்ச்சியின் வன்மை மென்மைகளை விசாரணைசெய்து உண்மைகாணுதல் பயன்தாலாமென்பது கருதி இஃது எழுதப்படுகிறது.

சாஸ்திரியாருடைய ஆராய்ச்சி சென்னைச் சர்வகலாசங்கத்துத் 'தமிழ் ரீடர்' திரு. சிவராஜபிள்ளையவர்கள் இயற்றிய 'உந்து என்னும் இடைச்சொற் பிரயோகம் அல்லது புறநானூற்றின் பழைமை' என்னும் நூலின் முடிபைக் கண்டித்தற்பொருட்டு எழுந்ததாகும். 'உந்து' என்பது புறநானூற்றுச்செய்யுட்கள் சிலவற்றில் வினைமுற்று விகுதியாய் வந்துள்ளதென்பதும், திரவிடமொழிச்சரிதப்போக்கானும் அது வினைமுற்றுவிகுதியாகவே துணியப்படுமென்பதும், ஆசிரியர் தொல்காப்பியனார் உந்தீற்றுச்சொற்களைப்பெயரெச்சமெனக்கொண்டுள்ளாரென்பதும், இவ்வாறு கொண்டதன் காரணம் உந்தீற்றுச்சொற்கள் வழக்காறற்றுப்போயின பிற்பட்டகாலத்தே தொல்காப்பியம் தோன்றினமையான் அச்சொற்களின் உண்மைநிலை அறிந்துகோடற்கரிதாய் முடிந்தமையே யென்பதும், அந்த ஏதுப்பற்றி உந்தீறுபயின்று வரும் புறநானூற்றுச் செய்யுட்கள் தொல்காப்பியத்திற்கு மிக முற்பட்ட காலத்தவாமென்பதும், திரு பிள்ளையவர்கள் கருத்து. இதனை மறுத்துத் தொல்காப்பியத்தின்கண்ணுள்ள உந்தீற்றுச் சூத்திரம் வினைமுற்றினையும் குறிப்பதாகுமெனச் சாஸ்திரியார் வாதிக்கின்றனர். யான் இங்கே ஆராயப்புகுந்தது புறநானூற்றின் பழைமையைப்பற்றியன்று. தருக்கவிஷயமாயமைந்த தொல்காப்பியச்சூத்திரத்தின்பொருள் யாது என்பதுபற்றியேயாம்.

'உம்மூர் தாகு மிடனுமா ருண்டே' என்பது தொல்காப்பியச் சூத்திரம். இச் சூத்திரத்திற்கு ஆசிரியர் கருதிய பொருள் யாதென

ஆராய்ந்து அறுதியிடுவதன்முன்னர், தொல்காப்பியப் பெருநூலுக்கு உரைவகுத்த நுண்ணறிவாளர்கள் எவ்வாறு இது பொருள்படுமெனக் கொண்டார்களென்பதை முதற்கண் விசாரிப்போம். உரையாசிரியரெனச் சிறப்பித்துக் கூறப்படும் இளம்பூரணர் 'எச்சஞ்சிறப்பே' என்னுஞ் சூத்திரத்தாற் பெறப்படும் எண்வகை யும்மைகளுள் இஃது ஒன்றாகாது. வினைசெய்மருங்கிற் காலமொடு வந்தது எனக் கூறி, 'நீர்க்கோழி கூப் பெயர்க்குந்து' என வோருதாரணமும் தந்துபோயினர். உதாரணமும் சூத்திர விவரணமும் ஒரு நெறியினவாதல்வேண்டுமாகலின், 'வினை செய்மருங்கிற் காலமொடு வந்தது' என வுரையாசிரியர் கூறியது பெய ரெச்சத்தினை நோக்கியதோ பிறிதொன்றினை நோக்கியதோ வென்பது அவ்வுதாரணத்தின்பொருளாற் பெறப்படவேண்டும். உதாரணத்திற் பயின்றுவரும் 'பெயர்க்குந்து' என்பதனைப் பண்டையாசிரியர்கள் எவ் வாறு பொருள்கொண்டனர்? தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரையிட்ட சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலினோர் கருத்து ஈண்டு எடுத்துக்காட்டும் இயைபுடையதேயாயினும், அன்னோர் கருத்துக்களை விலக்கிப் பிற ஆசிரியன்மார்கூறியுள்ளனவற்றையே முதலில் நோக்கு வோம். மயிலைநாதர் என்ற ஜைன வையாகரணர் இச்சொல்லினைப் பெயரெச்சத்திற்கு உதாரணமாகக் காட்டினார் (நன்னூல் 349 மயிலை). நன்னூலாரோடொத்த பெருமையுடையவரும், அவரது கொள்கைக ளோடு தங்கொள்கைகள் பலவிடத்தும் மாறுபடுதல்கருதித் தனி யிலக் கணநூல்செய்தவரும், தொன்னூல்களனைத்தையும் நன்கு கற்றுப் புலமைநிரம்பியவருமாகிய வைத்தியநாத தேசிகர், 'குட்டித்தொல்காப் பியம்' என் றழைக்கப்பெறும் தமது இலக்கணவிளக்கவுரையின்கண் இச்சொல்லினைப் பெயரெச்சமாகவே கொண்டனர். (இலக். விளக். 244. உரை). சங்கரநமச்சிவாயரும் 'கூப் பெயர்க்குந்து' என்பதனைப் பெய ரெச்சமாகவே கொண்டுள்ளமை அவரது விருத்தியுரையால் உணர லாகும். இங்ஙனமாகத் தமிழுக்கு வரம்பெனக் கூறத்தகும் ஆசிரியர் பலரும் 'நீர்க்கோழி கூப்பெயர்க்குந்து' என்பதன்கண்ணுள்ள பெயர்க்குந்து என்பதனைப் பெயரெச்சமென்றே ஒருமுகமாகக் கூறு கின்றனர். எனவே இப்புறநானூற்றுத்தொடர் எவ்வாறு பொருள் கொள்ளப்பட்டதென்பது இவ்விலக்கணங்கொண்டு தெளியலாகும். இளம்பூரணவடிகளும் கற்றறிந்தோர்க்கெல்லாம் அங்கீகாரமாயிருந்த

இப்பொருளையேகொண்டு உதாரணந்தந்தவரென்று கோடலே நேரிதாம். பிறவாறுகொள்ளுதலும் கூடுமென்னும் ஐயப்பாடு அவர்க்குத்தோன்று மையானே, உதாரணமட்டுந்தந்து அதன்றன்மையை விளக்காதுபோயின ரென்று நாம் கருதுதலே உரையாசிரியரது தகுதியோடு பொருந்துவ தாம். இங்ஙனமாகவும் முற்றுவினைகொண்ட 'நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து' என்பதனை உதாரணமாய்க் காட்டினரென்று சாஸ்திரியார் கூறு வது எவ்வாறுபொருந்தும்!

இனி, மற்றையுரைகாரர்களுள் தெய்வச்சிலையாருடைய உரையை நோக்குவோம். இவர் சூத்திரத்தின்முன்பின்னிமைபுதோன்றஉரைவகுத் துள்ளா ரென்பது 'எண்ணும்மை அதிகாரப்பட்டுவருதலான், இவ் வாறு (உம் உந்தாகத்திரிந்து) வருவது ஓர்பொருண்மேல் உம்மை யடுக்கியவழியென்று கோள்க' என றெழுதிச்செல்வதால் விளங்கும். பெயரேச்சவீறு என்ற கொள்கையினையே இவருங் கொண்டுள்ளாரென்ப தில் ஐயமேயில்லை. 'ஓர்பொருண்மேல் உம்மையடுக்கியவழி' என்ற வாக்கியப்பகுதி பெயரெச்சத்தினையே அவர் கருதினரென்பதைத் தெளி விக்கின்றது. அன்றியும், இவர் காட்டிய 'நெல்லரியு மிருந்தொழுவர்' என்னும் புறப்பாட்டு (24) மூன்று தமிழாசிரியர்களாற் பொருள்விளக் கஞ்செய்யப்பட்டுள்ளது. புறநானூற்றுரைகாரர் உந்தீற்றுச்சொற்களை எச்சமாகவேகொண்டு பொருள்விரித்தனர். சேனாவரையர் "'பாயுந்து' எனவும் 'தூங்குந்து' எனவும் '........தரூஉந்து' எனவும், '........பாயும்' எனவும் செய்யுமென்னும் பெயரெச்சமடுக்கி........மிழலை என்னும் ஒரு பொருள்கொண்டுமுடிந்தவாறு கண்டுகொள்க" என்று தமது சொல் லதிகார வுரையிற் (சூத். 233) கூறுகின்றார். இங்ஙனமே நச்சினார்க் கினியரும் 'பன்முறையானும் வினையெஞ்சு கிளவி' என்று சூத்திரவுரை யில் எழுதியிருக்கின்றார். இம்மூவரதுகருத்தோடு பொருந்தவே ஒரு பொருண்மேல் உம்மை அடுக்கிவந்ததென்று மேலே கூறப்பட்டது. ஆகவே தெய்வச்சிலையாரது உரையின்படி இச்சூத்திரம் பெயரேச்சத் திற்கே ஏற்புடையதென்பது கரதலாமலகமாம்.

இதுகாறும் நாம் தந்துள உதாரணங்களாலும் பிறகுறிப்புக்களா லும் 'உம் முந்தாகும்' என்ற சூத்திரம் பெயரெச்சத்தினை நோக்கிற்றே என்பது போதரவைத்த உரைகாரர் இருவர்கருத்தையும் விசாரணையிற்

றெளிந்தோம். இனி ஆராயப்புகும் உரையிரண்டினும் அவற்றின் ஆசிரியர்கள் மிகத்தெளிவாக வியக்தவாசகத்தாற் பெயரெச்சத்திற்கே இச்சூத்திரம் பொருந்துவது எனக் கூறியுள்ளார்கள். இவருள்ளே சேனவரையர் 'இடனுமாருண்டே யென்றது இத்திரிபு பெயரெச்சத்திற் கீரையவழி யென்பதுகருதிப்போலும்' என்று வரைந்தனர். நச்சினார்க்கினியர் 'இடனுமாருண்டே யென்றது இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க' என்று ஒருமுடிபாகக் கூறுகின்றனர். இவ்வாக்கியங்களாற் சூத்திரத்தின் ஆணை செல்லுமிடமும் உதாரணத்தின் இயல்பும் மிகத் தெளிவாக விளங்குகின்றன. இவ் விருவாக்கியங்களையும் சாஸ்திரியார் 'இடைச்செருகல்' என்று கூறத்தலைப்பட்டனர். தமது கூற்றுக்கு இரண்டு அரிய காரணங்கள் தருகின்றார்கள். சேனவரையரும் நச்சினார்க்கினியரும் 'கூப்பெயர்க்குந்து' என்பதனை முற்றுவினையென அறியாதவர்களல்லரென்பது ஒரு காரணம். இவர்கள் இவ்வுதாரணத்தினை முற்றுவினையெனக் கொண்டார்களென்பது சாஸ்திரியாரவர்களுக்கு எவ்வாறு தெரிந்ததோ அறியக்கூடவில்லை. அவர்களும் விளக்கினார்களில்லை. இவ்வுதாரணத்தினை யெடுத்து வியவகரிக்க முன்வந்த பேரறிவாளரனைவரும் பெயரெச்சமென்றே இதனைக் கொண்டுள்ளாரென்பது முன் காட்டப்பட்டது.

சாஸ்திரியாரவர்கள் தமது தமிழுணர்ச்சிகொண்டு வினைமுற்றேயெனக் கூறத்துணிவார்களானால் தமிழுணர்ச்சிநிரம்பிய சேனவரையர் முதலியோர் அவ்வாறு கொண்டிலரென்பதே முடிபாகும். இவ்வகையான அபசாரங்களைப் பெரியோர்பால் ஏற்றுதல் தகாதெனச் சாஸ்திரியாரவர்களுக்கு உணர்த்துவது தமிழுணர்ந்தோர்கடமையாகும். சாஸ்திரியார் கூறும் பிறிதொருகாரணம் மிகவும் புதுமைவாய்ந்தது. அவர் வெளியிட்டிருக்கும் தொல்காப்பியச் சொல்லதிகாரக்குறிப்பிலே சேனவரையர்முதலியோர் உரையிற் பலவிடங்களில் இடைச்செருகல்களுள வாகக் காரணங்களுடன் கூறியிருக்கின்றார்களாம்! அதனால் ஈண்டும் இடைச்செருகல் ஏற்பட்டிருத்தல்வேண்டுமாம்! சாஸ்திரியாரது தருக்கமுறை சாலவும் அழகிது! 'சேனவரையர் முதலினோர் உரையில் ஓர் இடைச்செருகலுள்ளதாகச் செந்தமிழில் எழுதியிருக்கின்றேன். ஆதலால் என் புத்தகத்தே காட்டியபடி இடைச்செருகல்கள் பல அவ்வுரையில் உண்மையில் உள்ளன' என வாதிக்க முன்வருவார்கள் போலும்! இடைச்செருகலென்பது இலக்கணவுரை நூல்களில் அருகிக்

காணப்படுவதொன்றாகும். இடைச்செருகலென ஒன்றைக்கொள்வதன் முன்னம் நாம் திருப்திகரமாய் விடையளித்துக்கொள்ளவேண்டும் வினாக்களும் பலதிறத்தவாம். ஓரிடத்தில் இடைச்செருகலுள்ளதென்று நிரூபிக்கப்படுமாயின் அக்காரணத்தாற் பிறிதோரிடத்தும் இடைச் செருகலுளதாதல் பெறப்படாதாம். இடைச்செருகலெனக்கொள்ளும் ஒவ்வொன்றும் தனித்தனியே முன்பி னியைபுநோக்கியும், ஆசிரியர் கருத்துநோக்கியும், ஆராயப்படவேண்டுவதாகும். இம்முறையிற் சென்று ஆராயாது தமது மனம்போனபடி இடைச்செருகலென எளி திற் கூறிவிடுவது தமது பொறுப்புணராதார்கையாடும் வெற்றுரைவாத மேயன்றிப் பிறிதில்லை. ஒருவிஷயம் இங்குக் கவனிக்கத்தக்கது. 'இடனுமாருண்டே' என்று வருவதற்குப் பயன்கூறுமுகத்தால் இவ் வாக்கியம் எழுதப்பெற்றிருப்பது அஃது இடைச்செருகலன்றென்பதை நன்குவிளக்குகின்றது.

இங்ஙனமாகத் தொல்காப்பியவுரைபற்றிச் சாஸ்திரியார் தொடுத்த வாதம் வலியற்றொழிந்தமை காணலாம். இனித் தொல்காப்பியரது கருத்து யாதென விசாரித்துணர்தல்வேண்டும். 'செய்யும்' என்னும் முற்றைக் குறித்து,

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யு மென்னுங் கிளவியொடு கொள்ளா"

(சொல். வினை. 30.)

எனத் தொல்காப்பியர் விதியமைத்திருக்கின்றார். ஆகவே 'அவர் செய்யும்', 'நீ செய்யும்', 'நான் செய்யும்' என்பது முற்றன்று என்பதும்,

'அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்றும் உரித்தே'

(சொல் 38.)

என்ற விதியில் அவை யெச்சமாயமைதல் தகும் என்பதும் தொல்காப்பியர்கருத்தாம். இக்கருத்துக்கள் தாம் கண்ட இலக்கியங்களை யாராய்ந்து கொண்டனவேயன்றித் தாமாகவே இலக்கிய வாதாரமின்றிக் கற்பித்துக் கொண்டனவல்ல. இலக்கியங்கண்டதற் கிலக்கணங்கூறுதலே மரபாக லின். ஆதலால் உந்து என்னும் பிரயோகம் எவ்வாறுளதென நோக்கு

வோம். அவ்வீற்றுவினைச்சொற்கள் படர்க்கையொருமையையும் படர்க்கைப்பன்மையையும் எழுவாயாகக்கொண்டு வருதல் காணப்படுகின்றது. உதாரணமாகப் புறநானூற்றில் 24-ம் செய்யுளையும், 384-ம் செய்யுளையும் நோக்குக. இருவகைப் பாடங்கட்கும் ஒத்த ஓரிலக்கணங்கூறுதலே அமைவுடைத்தாம். இலக்கணமொன்றே பிரயோகங்களனைத்தையும் விளக்கவல்லதாயிருக்க, தனித்தனி யிலக்கணங்கூறுதல் மரபன்று; இலக்கணநெறியோடுபொருந்துவதுமன்று. செய்யுந்து என்னும் வாய்பாட்டுச்சொல் முற்றெனக்கூறின் 'பல்லோர்படர்க்கை' என்னுஞ்சூத்திர விதியொடு முரணுவதாம். ஆதலாற் பெயரெச்சமெனக்கோடலே தொல்காப்பியர்கருத்தொடு பொருந்துவதாமென்பது தெளிவு.

இங்ஙனமிருப்பவும் மேற்கூறியது தொல்காப்பியருடையகருத்தன்றெனக் காட்டுதற்குச் சாஸ்திரியார் ஓர் அரிய காரணந் தெரிந்தெடுத்துத் தருகின்றார். 'அவ்வாறு ஆசிரியர்க்குக் கருத்தாயின் பெயரெச்சத்திற்கேயுரிய ஈறுகிய உம்மின் உகரம் தானேறிய மெய்யுடன்கெடுமென்று விதிக்கும், 'அவற்றுள் ..........புலவர்' (தொல். சொல். வினை. 41) என்ற சூத்திரத்தின்பின்னர் இச்சூத்திரத்தையும் ('உம்மூந்தாகும்') கூறியிருப்பார்' என்பதே அக்காரணம். வியவகாரரீதிக்கு இக்காரணம் வலியுடைத்தென்றே கொள்வோம். அச்சூத்திரம் முற்றுச்சொல்லினையும் தன் ஆணையுட்கொள்ளும் என்பதே உரைசெய்தாரனைவருடைய துணிபும் ஆம். தெய்வச்சிலையார் 'பெயரெஞ்சுகிளவிக்கும்' எனவும்மை விரித்தே பாடங்கொண்டார். வினைமுற்றினை 'உரையிற்கோடல்' என்னும் உத்திவகையாற் கொள்ளாது ஆசிரியர்க்குடம்பாடாகிய அருத்தாபத்தியாற் பிறவுரைகாரர்களும் கொள்ளுகின்றமையின், தொல்காப்பியர்க்கே இது கருத்தென்பது அவர்கள்கொள்கை. சாஸ்திரியார் கூற்றுப்படி முற்றுக்கும் எச்சத்திற்கும் 'உம்மூந்தாகும்' என்னுஞ்சூத்திரம் பொதுவாயின் மேலைச்சூத்திரத்தினையடுத்தே அது வைக்கப்பெற்றிருத்தல்வேண்டும். அவ்வாறு வைக்கப்பெறுமையானே முற்றுக்கும் எச்சத்திற்கும் 'உம்மூந்தாகும்' என்பது பொதுவன்றென்பதே சித்திக்கின்றது. இஃதெங்ஙனமாயினும், 'செய்யும்' என்னும் முற்றினையும் பெயரெச்சத்தினையும் கூறியபின்னர் உடனடுத்து 'உம்மூந்தாகும்' என்பதனை வைத்திருத்தல்வேண்டும். அவ்வாறு காணப்படாமைகொண்டும் சாஸ்திரியார்கூறுவது தொல்காப்பியர்க்கு உடன்பாடன்றெனக்கொள்ளலாம்.

ஆனால், சாஸ்திரியார் கூறுவதுபோல்வன காரணங்களாக அங்கீக ரிக்கத்தருவனவல்லவென்பதே உண்மையொடுபட்டதாம். சூத்திரங்களை நூலின்கண் நிறுத்துமுறை தருக்கநெறியொன்றேமட்டும் அமைந்து நிற்பதன்று. ஆசிரியருடைய கருத்துக்களனைத்தையும் முற்றுமறிதல் ஒருவருக்கும் எளிதன்று. சூத்திரநிறுப்புமுறையில் எத்தனை காரணங்கள் அவர் உள்ளத்தில் வியாபரித்தன என யாவர்க்கேனும் முற்றக் கணக்கிடுதல் கூடுவதன்று. ஆதலின் சாஸ்திரியாரது போலிக்காரணம் யாதும் பயன்றரவல்லதன்றாம்.

இத்துணையுங் கூறியவாற்றான் 'உம்முந்தாகும்' என்னுந் தொல் காப்பியச்சூத்திரம் பெயரெச்சம் ஒன்றனுக்கே ஏற்புடைச்சூத்திரமெனல் உரைகாரர் அனைவருக்குங் கருத்தாமென்பதும், ஆசிரியர் தொல்காப்பிய னார்க்கும் அதுவே துணிபாமென்பதும் தெள்ளிதின் விளக்கப்பட்டன. திரு. சிவராஜபிள்ளையவர்கள் தாம் கற்ற கல்விக்கும், அறிவுடைமைக் கும் ஏற்பத் தொல்காப்பியத்தினையும் அதன் உரைகளையும் செவ்வனே யறிந்து தமது ஆராய்ச்சியுரையை யெழுதியுள்ளார்கள். திரு. சாஸ்திரி யார் கூறுவன சிறிதும் பொருந்தாமை மேலேகாட்டியவைகளால் தெளி வாகும்.

சாஸ்திரியாருடைய உள்ளக்கிடை தமிழறிஞர்களைப் பெரிதும் புண்படுத்துவதாகும். தமது கொள்கைக்கு முரண்பாடான வாக்கியங் கள் நன்னூல்படித்த வொருவரால் இடைமடுக்கப்பட்டனவென்று சாஸ்திரியார் கூறுகின்றார். இடைச்செருகலுள்ளதெனக் கண்டுகொண்டதோ டமையாது, அதுசெய்தார் இன்னாரென நிச்சயித்த இவருடைய ஆராய்ச்சித்திறன மிகவும் மெச்சத்தகுந்ததே! நன்னூலாரிடமும், நன்னூல்கற்றாரிடமும் அவருக்குள்ள மதிப்பு வெளியாகின்றது! இளம் பூரணத்தில்வரும் (சொல். கிளவி.) 'மக்கட்சுட்டே'யென்பது 'மக்கள் என்று வரைந்துசுட்டுதற்குக் காரணமாகிய தன்மை யென்னும் ஒருவன்' என்ற வாக்கியத்தின் பொருளுணரமாட்டாது, அதற்குத் திருந்தியபாட மொன்று தமது சொல்லதிகாரக் குறிப்பிற் கற்பிக்கத்துணிந்த திரு. சாஸ்திரியாரிடமிருந்து வேறு யாதுதான் எதிர்பார்க்கக்கூடும்? இவ் வண்ணம் சிந்தித்து அமைதலே அறிவுடைமை, தமிழ்மொழி உய்தி பெறுவதாகுக!

கல்யாணசுந்தரன்.

# தமிழ்க்கடல்.

இக்காலத்திற் புஸ்தகாலயங்களை (நூல்நிலைகளை)ப் பற்றிப் பெரு முயற்சிகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இம்முயற்சி முன்னுக்கு வருமாறு அறிஞர்பலர் பெரிதும் உழைத்துவருகின்றனர். ஆயினும், அவற்றிற்கான நூல்கள் திருத்தமுற வெளிவரவில்லை. வெளிவந்துள்ள சிற்சில நூல்களும் ஒரே அமைப்பாக ஓர் இடத்திற் கிடைப்பது அரிதாகின்றது. அதனால், ஆத்திசூடிமுதல் சங்கச்செய்யுள் இறுதியாக உள்ள நூல்கள் அனைத்தும் 'தமிழ்க்கடல்' என்னும் பெயரால் வெளியிடத் தொடங்கப்பெற்று, அச்சேறிவருகின்றன. இந் நூல்நிலையின் பதிப்பாசிரியர், கா. நமச்சிவாயமுதலியார் அவர்கள். மாதந்தோறும் ஒரு நூல் வெளிவரும்.

இதற்குக் கையொப்பமிடுவோர் ஒரு ரூபாய் முற்பணமாகச் செலுத்தவேண்டும். அப்படிச் செலுத்துவோருக்கு ஒவ்வொருபுத்தகமும் முக்கால்விலைக்குக் கொடுக்கப்படும்.

## முதற்றொகுதியுள் அடங்கியவை.

இத்தொகுதியுள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரண்டு நூல்கள் அடங்கியுள்ளன.

முதலில், அவ்வையார் வரலாறும், அவர் எக்காலத்தில் இருந்தவர் என்பதும், அவர் இயற்றிய நூல்களைக்கொண்டே ஆதாரங்காட்டி எழுதப்பட்டுள்ளன.

இந்நூல்களுக்குப் பதிப்பாசிரியர் எழுதிய தெளிவான உரையும், இலக்கணக்குறிப்பும், வேண்டும் இடங்களில் விரிவுரையும் அமைந்துள்ளன.

பின்னர், முகவை இராமாநுஜகவிராயர் எழுதிய விருத்தியுரையும் பாடபேதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இறுதியில், திருநெல்வேலியிலிருந்து கிடைத்த உரை சேர்க்கப்பட்டுளது.

மானேஜர்,

தமிழ்க்கடல் ஆபீஸ்,

சாந்தோம், மயிலாப்பூர், சென்னை.

# தமிழிலுள்ள நிறச்சொற்கள்.

## ஓர் சொல்லாராய்ச்சி.

**(நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர் எழுதுவது).**

நிறங்கள் வெள்ளை, கருப்பு, சிவப்பு, மஞ்சல், நீலம் ஆதியன. கண்ணுக்குப்புலமாகிய இவ்வுருவச்சிறப்பியல்புகள் எவ்வாறு முதற்கண் மனதில் நுழைந்தன? ஒரு உருவத்தை வெள்ளை என்றும் பிறிதொன்றைக் கறுப்பென்றும் யாது குறிப்பைக்கொண்டு எம் முன்னோர் வேறுபடுத்திக் கூறினர்? சிவப்பும் மஞ்சலும் நீலமும் ஒன்றல்ல என உணரப்பட்டமைக்கு அடிப்படையான பேதம் யாது? இதனை நுணுகி ஆராய்வதுண்டாயின், யாம் "தமிழமைப்புற்ற வரலாறு" என்னும் நூலினுட் காட்டிய "இடம்பற்றிய குறிப்"பே நிறவிகற்பத்தைப் பகுத்துணர்தற்கு வாயிலாயிற்றென்பது வெள்ளிடைமலையென விளக்கமாகும்.

### வெள்ளை.

அஃதெங்ஙனமெனில் அண்மை, சேய்மை, மேலுறல், கீழுறல் எனும் இந்நான்குமே எவ்வெப் பொருள்களையும் நாம் அறிந்து பெயரிடுதற்கு வாயிலாக அமைந்த மனக்குறிப்புக்கள். இவ்வாறே மேலுறலை உணர்த்தும் "எழு" என்னும் முதற்சொல்லின்வழி "எல்" என்னும் எழுவானின் [சூரியனின்] பெயரும், அவ்வொளிப்பிழம்பினின்றும் வெள், வெள்ளை எனத் தவளவர்ணப் பெயரும் வந்தன.

அஃது இன்னணம் பெறப்படுவது:— வெள்ளை எனுஞ்சொல் வெளிச்சம் (விளக்கம்) எனுஞ் சொல்லினின்று பிறக்கும். வெளிச்சம் விளங்குதலினின்று வருவது. ஆயின் விளங்குதல் எனுஞ் சொல்லின் வரலாறு யாது? தமிழின்கண்ணுள்ள ஒரு முக்கியமான சொல்லமைப்பு விதியை மனத்தில் தரித்துக்கொண்டோர் உடனே இலங்குதலே விளங்குதல் ஆயிற்று என விடைபகர்வர். இலங்குதல், இலக்கம், இலக்கு, விளங்குதல், விளக்கம், விளக்கு என இவ்வாறு சொற்கள் விரிந்தமை ஒக்கும். ஆதியில் உயிர்முதலாய் எழுந்த முதற்சொற்கள், பின் சொல்வேறுபாடும் பொருள்வேறுபாடும் உண்டாகக்குமுகத்தால் மெய்ம் முதலாயின எல்லாம் விதிப்படி, "இலங்கு" என்பது விலங்கு என்றாகும்,

அப்பால் 'ஒத்தபிறப்புடைய ஒலிகள் சொற்பொருள்விகற்பம்நோக்கித் திரிந்துவரும்' என்னும் விதிப்படி "விலங்கு" என்பது விளங்கு என ஆயிற்று. விலங்குதல் என்னும் உருவமே விலங்கல் எனுஞ் சொல்லில் "விளக்கமானது" எனும் காரணத்தால் மலைப்பொருள்தந்துநிற்றலையும் நோக்குக. விளங்குதல் தன்னகத்துள்ள ளகரத்தை டகரமாக மாற்றி விடங்கம் என நின்று இலங்குதலின் ஓர் தனிநோக்காகிய அழகைக்குறித்தலும் ஒன்று. இனி, இலங்குதல், எனும் சொல்லின் பிறப்பு யாது? அஃது எல் எனும் அடியாய்ப் பிறந்தது. "எல்லே யிலக்கம்" என்றார் சொல்லர்த்தங்களைத் துருவியறிந்த தொல்காப்பியனாரும் (தொல். சொல்லதி. 271). எல் என்பது ஒளிப்பொருளுள்ள ஒரு முதற்சொல். அதினின்றும் எல்லார் (ஒளியில் வசிப்போர், தேவர்) எல்லே (வெளியே) எல (வெளிச்சத்தோடு, வெள்ளென) ஆகியன பல சொற்கள் பிறக்கும். அவ்வாறே எகரம் இகரமாகி இலகு, இலங்கு ஆதியனவன்றி, அதுதான் ஒகரமாகி ஒலித்தல் (வெண்மையாக்கல்) ஒளி ஆதியன சொற்களும், உகரமாகி உலர் ஆதியன சொற்களும் வருவனவாம். அப்பாற் சொன்முதல் மெய்பெற்று உருவமும் பொருளும் சிறிது விகாரப்படும்வழி, "எல்" (எழிலெனநின்று) கெழு, காழ், தெளி, தேர் எனும் சொற்களாகவும், "இலகு" நிலவு, விலங்கல் ஆதிய சொற்களாகவும், "ஒலி" சொலித்தல் ஆதியன சொற்களாகவும், "உலர்" சுல்லி, சூளை ஆதியன சொற்களாகவும் வரும். விரிவைத் "தமிழ்அமைப்புற்ற வரலாறு" என்னும் நூலிற் காண்க.

ஆயின் எல் எனும் அடியின் அன்றேல் முதற்சொல்லின் உற்பத்தியையும் அன்றோ விளக்குதல்வேண்டும் எனிற் கூறுதும். எகரமானது எம் மினியமொழியில்மட்டுமன்று, வேறுபலமொழிகளிலும் மேலுறுதலைச் சுட்டும் ஒரு பேச்சொலியாம். எடு-த்தல், எறி-தல், எழு-தல் எனும் இவையெல்லாம் மேலுறுதலைக் காட்டுஞ்சொற்கள், "எ" என்பதனொடு டகரம், றகரம், ழகரம் ஆகிய வியஞ்சனங்களைச் சேர்த்து உருவாக்கப்பட்டன (தமிழமைப். வர. 16-ம் பக்கம் முதற் காண்க). இனி, தமிழ்மக்கள் எழுந்து எறித்துவருகின்ற சூரியனை எல் (எழுபவன், எழுவான்) எனப் பெயரிட்டழைத்தனர். எல், எல்லு, என்று, என்றூழ் (என்று + உள்)என்பன தமிழிலுள்ள பண்டைக்காலச் சூரியன்பெயர்கள். எல் என்னும் பெயரே சுமேரியம் கிரேக்கம், லத்தீன் முதலிய ஆரிய மொழிகளிலும் விரிந்தும் திரிந்தும் சூரியன்பெயராய்நிற்றலும் ஈண்டு நோக்கத்தக்கது.

எல் எனும் முதற்சொல்லினின்று வெள்ளை எனும் வழிச்சொல் வந்திட்டமையைக் கண்டுகொண்டனம். அதனைப்போலவே, எழில் எழுத்து, எழினி, கெழு, கேழ், குரு, குலவுதல், தெளிதல், தேறல், தேன், திகழ்தல், திங்கள், வெளி, வெளிச்சம், வெள்ளி, வாலிய, வாள், வெள்ளம், வேலை, வெளுத்தல், வெட்குதல், விண், மின்னுதல், மின், விடிதல், வெடித்தல், விள்ளுதல், விளம்புதல், வெட்டுதல், வித்தை, எரிதல், எறித்தல், நிறம், நெருப்பு, தெறுதல், செறுதல், இலக்கித்தல், நிலவு, ஒளி, ஒளிர், ஒளிறு, ஒள்ளியா, ஒட்பம், ஒடித்தல் (ஒளி செய்தல்), ஒலித்தல், ஒலியல், துலங்குதல், துளங்குதல், உலரல், உலறல், உணக்கல், சுல், சுள்ளு, சுடுதல், சுளுந்து, சூளை, சோடை, சுணங்குதல், துவட்டுதல் (காய்ச்சுதல்), துவர், சுவப்பு ஆதியன பலபல சொற்கள் பிறந்திருத்தலை அகராதியுங் கையுமாய் ஆராய்ந்து கண்டு இன்புறுக.

## கறுப்பு.

வெள்ளைச்சொல்வந்தமுறையே கறுப்புச்சொல்லும் வேறொரு இடக் குறிப்பின்வாயிலாய்ப் பிறப்பதாயிற்று. அதனை இனி விளக்குதும். வெள்ளைநிறம் வெளிப்பு அன்றேல், பொருள்கள் விரவி வெளிச் சத்தைத் தடைசெய்யாதிருத்தலாகிய நிலையோடு பொருந்துவதொன்று. வெளிப்பும், வெடிப்பும், வெவியும் ஒன்று. இவை மூன்றுசொல்லும் வெளிச்சம் பாவவிடும்தன்மையை உணர்த்தும். ஆயின், பொருள்கள் அடர்ந்து வெளிப்பை அடைப்பாக்கி, வெளிச்சமற்றநிலையைச் செய்யுங் கால், அவ்வடர்ச்சியால் உண்டாவது வெளிப்பு (வெள்ளை) என்பதினை வேறாகிய பிறிதொரு மனக்குறிப்பாம். அம்மனக்குறிப்புத்தான் அண்மையோடு உரிமைபூண்டது. அதனையே கறுப்பு எனுஞ்சொல் விளக்கும். வெள்ளை எனுஞ் சொல் மேலுறுதல் (எழுதல்) எனுங் குறிப்போடு கூடியவாறு, கறு-ப்பு எனுஞ் சொல் அண்மை எனும் குறிப்போடு கூடி இயல்வது.

எங்ஙனம்? அண்மையை விளக்கும் தமிழ் முதற்சொற்களுள் ஒன்று அடு என்பதாம். அடுத்தல்=நெருங்குதல், அண்மையாதல். இந்த அடு எனும் முதற்சொல்லினின்றும் கடு எனும் வழிச்சொல் பிறக்கும். கடுத்தல், மிக அண்மையை நாடல், விரைதல். உ-ம்.,

"காலெனக்கடுக்குங் கவின்பெறுதேரும்" (மதுரைக்காஞ்சி 388). அண்மையால் உண்டாகும் அடர்த்தி அல்லது மிகுதியும் கடுத்தலின்பொருளாம். உ-ம். "நெஞ்சங்கடுத்தது" (குறள் 706). கடுப்பு என்னும் உருவத்தினுக்கும் அண்மையைநாடுதலாகிய வேகப்பொருளுண்மையை "மண்டு கடுப்பினிற் படரும் வாம்பரி" எனுஞ் சேதுபுராண (கத். 15) மேற்கோளினுணர்க. கடுக்கமும் அது. கடுமை=வேகமும் (மணிமே. 17, 25) மிகுதியும் (ஐங்குறு. 335) விஞ்சிய அண்மைநிலையாகிய இறுக்கமு மாம். இவ் விறுக்கத்தினின்றும் "கடு" என்னும் அடிக்குக் கூர்மை, உறைப்புவிசேடம் என்னும் பொருள்கள் ஏற்பட்டமையும் உய்த்துணர்க. இங்ஙனமே கடு எனும் வழிச்சொல்தான் கடம், காடு (=அடர்ந்தது, அடவி), கடி (=மிகுதி), காழ் (வயிரம்), காய், கடுமை, கடும்பு, கடினம், கடு(முள்), கள்ளி, கருக்கு, கடுகம்(சாக்குவகை), காரம்பு, கறுவா, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, காரம் ஆதிய பல்வேறுசொற்கட்குத் தாயாயிற்று என ஆராய்ந்து கண்டு மகிழ்க.

இனி, கடு எனுஞ் சொல் உருவும் பொருளும் வேறுபடுமுகத்தாற் கறு என ஈற்று டகாரம் தன்னொடு பிறப்பொத்த றகரமாய்த் திரிந்து நிற்றலை நோக்குக. கறுச்சொல்லினுக்கும் இறுகுதல்(முற்றுதல்) உறைத்தல் (கோபித்தல்) எனும் பொருளிருத்தலை "கவ்வை கறுப்ப" (மதுரைக் காஞ்சி 271) "வசையுநர்க்கறுத்த பகைவர்" (பதிற்றுப்பத்து 32, 15) எனும் பிரயோகங்கள் காட்டும். பிந்திய கறுப்பும் கடுப்பும் ஒன்றேயென்பது, "கடுநவையணங்குங் கடுப்பும்" என வெகுளிப்பொருளிற் கடுப்புச்சொல்வருதலாற் காண்க (பரிபாடல், 4, 49). கறுச்சொல்லின் ஆதியர்த்தம் அடர்த்தியே என்பதற்கு ஐயப்பாடு உண்டாயின், அஃது தமிழ்ப் பாகதங்களாகும் கன்னடம் தெலுங்கு ஆதியவற்றிற் கறுச்சொல் திண்மை, கூர்மை என்னும் அர்த்தங்கள்கொண்டுநிற்றலை நோக்குங்காற் றள்ளிவைக்கப்படும். மலையாளத்திற் கறுப்பு காடுமூடாயிருத்தற்குப் பெயர். இவ்வாறு "அண்மை" எனும் குறிப்பிற் பிறந்த அடர்த்தி எனும் பொருளிலேதான் கறுப்பு என்பது, வெளிச்சமயமான வெள்ளைக்கு மறுதலையான இருட்டன்மைக்குப் பெயராயிற்று. ஒளியை உட்படவிடாது பொருள்கள் அண்மையால் அடர்ந்தபான்மையைக் காட்டும் தோற்றம் யாது அதுவே கறுப்பாம் (கறுப்பு=கடுப்பு=அடர்த்தி=அண்மை).

கறுப்புச்சொல்லோடு உறவுபூண்ட வழிச்சொற்கள்: கறை, காடி, கருள், கருமை, கார், களிம்பு, காளம், களங்கம், காளி, காளிக்கம், காளிமம் என்றற் றொடக்கத்தன பலவுள. இவற்றுட் பிந்தியவற்றை வட மொழியாளர் தஞ்சொற்களென்பர். அங்ஙனமேயாயினும், எம் தமிழினுக்கு அடிப்படையாயுள்ள அடு, அல், அள், எனும் முதற் சொற்கள்வழியாய்ப்பிறந்த கடு, கல், கள், எனும் வழிச்சொற்களே அவ் வடசொற்கட்குப் பிறப்பிடமாமென உணர்க.

## பச்சை.

வெளிச்சம் தோன்றவிடாது இடையீடின்றிப் பொருள்கள் அடர்ந்திருத்தலாகிய கடுப்பு என்னும் நிலையினின்றும் கறுப்பு எனும் நிறப்பெயர் வந்தமையைக் கண்டாம். பயத்தைக் கிளர்த்துவதாகிய இவ் வமங்கலவர்ணத்தை நோக்குதல் ஒழிந்து, இனி இறும்பூதுக்கிட ணாகிய பச்சை எனும் நிறப்பெயரை ஆராய்வாம்:

"பச்சை" ஆதிவர்ணங்களு ளொன்றன்று; கறுப்பின் ஒருபேதமாய் நீலமும் மஞ்சளும் கலத்தலால் உண்டாவது. ஆதலாலன்றோ கறுப்புச் சொல்லினுக்கு அடிப்படையென யாம் காட்டிய "அடு"எனும் முதற் சொற்றான், பச்சைச்சொல்லினுக்கும், தான் சிறிது பேதப்பட்டவழி, அடிப்படையாகின்றது. இனி நிறப்பொருளிற் "பச்சை" ஓர் ஆகு பெயராம். பச்சையான (காயாத) இலையின் நிறம் பச்சை. "பச்சிலை நிறம்" எனப் பாவைவழக்கிலும், "கொளபாட்ட" (குழைநிறம்) எனச் சிங்களத்திலும் வருதல் இங்கு நோக்கற்பாற்று. அப்பால் இலையாதிய வற்றிற்குப் பச்சை எனும் விசேடணம் பொருந்துவது எவ்வாறெனத் தருவிநோக்குங்கால், இச்சொல்லின் பிகிர்வழி நன்றாக நிச்சயிக்கப் படும்.

செந்தமிழ்நூல்களிற் பசை எனும் ஓர் வினையடி காணப்படும். பசைதல்—பற்றுதல். "பசைதல் பரியாதா மேல்" (நாலடி). உண்மையில் பசை, பற்று எனும் உருவங்களிரண்டும் நச்சு (நசை) நத்து ஆதியனபோல அடு, அத்து என்றற் றொடக்கமான முதற்சொல்லடிகளின் விகாரமே யாம் (தமிழமைப்புற்ற வரலாறு 4-ம் அதிகாரம் காண்க). பசைதலையும் பற்றுதலையும் ஒப்புநோக்கிக்காணுமிடத்து, கடுமையின் மறுதலையாய், ஒட்டும்பெற்றிவாய்ந்ததாயிருக்கும் நீர்த்தன்மைபோகிகூடிய இளக்கமே

பசையாமென வெளிப்படும். ஈரப்பசை, ஈரப்பற்று எனும் வழக்குகளை யும் ஒப்பிடுக. பசைச்சொல்லினுக்கு இதுவே ஆதி அர்த்தமாமென் பது அன்னியமொழிகளின் சொல்வழக்குக்களாலும் இனிது வலியுறுத் தப்படும். ஆரியத்தில் இது பச், பக்ஷ என, தொடுத்தல், கட்டுதல், அன்பு (அண்பு) கொள்ளல், ஆதிய பொருள்தரும். லத்தீனில் Pango இறுக்குதல், கட்டுதல், Pac-iscor தளராது நாட்டுதல், Pac-o ஒன்று கூடல் என நிற்கும். அம்மொழியின் Pax உறவாடல் எனும் சொல் லும் எமது பசைதல் என்னும் சொல்லும் நோக்கி மகிழத்தக்கன. இத் துறையை விரிப்பின் வரம்பின்றியோடும். இது கிடக்க: பசைச் சொல்லே பிசை என நிற்கின்றவழி, யாம் எடுத்துரைக்க விரும்புவது எம் பாராயணர்கட்கு எளிதிற் புலனாகும். பிசைதல்-நீர்த்தன்மையான பொருளைக் குழைத்தல். பிசைச்சொல் பிசின் என நின்று பசைத் தன்மையுள்ள சாம்பிராணியையும், பசை விசேடத்தையும் குறிக்கும். பிசினி – பசை. இனி பிசினியும் பிசுனமும் பஞ்சைக்குறித்தலு மொன்று. பஞ்சுச் சொல்லும் பசைச்சொல்லின் விகாரமேயாம். இளக்க மாய் (பசை) மிருதுவாய் உள்ளது பஞ்சு. பிஞ்ஜ, பஞ்ஜி எனும் ஆரியச்சொற்களையும் ஒப்புநோக்குக. பிசினும் பசையும் ஒருசொல்லே என்பதை மேலும் உய்த்துணரவேண்டின், பிசினே பயின், பயிர்ப்பு என இலக்கியங்களில் நிற்றலைக் காண்க. "கப்பிணர் மாத்திற் காலும் பயின தாய்" (திருவிளை. இந்திரன்பழி. 13.) "பலகோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி" (கலி 50). எமது பசை, பிசின் என்னும் சொற்கள் லத்தீ னில் Pix, கிரேக்கத்தில் Pissa, வடமொழியில் பீது (தாரு) என பிசினை, பிசின்மாத்தையும், லத்தீனில் Ping-ere, வடமொழியில் பிஞ்ஜ எனப் பசை (வர்ணம்) பூசுதலையும் காட்டும் சொற்கட்கு அடியாய் விளங்குதலையும் அறிந்து மகிழ்க. (தொல்காப். சொல். 308 காண்க).

இன்னணம் நீர்த்தன்மையோடுகூடி இளக்கமுற்றிருப்பதே பசை என்றாயிற்று. இம்மனக்குறிப்புக் "காய்ந்தது" என்றதின் எதிர்மறை யாகுங்காற் "பச்சை" எனப் பெயர்பெற்றது. பச்சை பசையுள்ளது, காயாதது, நீர்த்தன்மையோடுகூடியது. இதுதான் பசுமை, பைது, பை ஆதிய வேறுருவங்களும் அடைவதாயிற்று. பசுமை நீர்த்தன்மை யற்ற காடின்னியத்தின் மறுதலே. பைது நீர்த்தன்மை, ஈரம். "பயனிலம் பைதற" (கலித் 20) "பைதற விளைந்த பெருஞ்செந்நெல்" (பெரும்

பாணற். 230). அப்பால், பைதல் எனுஞ்சொல் முதிராத (காய்ந்து இறுகாத) நிலையைக்காட்டுமுகத்தால் இளமை (இளக்கம் பசை)க்கும் பெயராயிற்று. "பைதல் வெம்பிறை" (அருணகிரி). இவ்வாறே பசம் எனும் ஒருருவமும் இளமைக்காயிற்று. அதுதான் பை எனவும் நிற்பது (மலைபடுக. 40).

இதுகாறுங் கூறியவற்றாற் காய்ந்தமைக்கு எதிர்மறையான, நீர்த்தன்மையோடுகூடிய இலையாதியனவற்றிற்குப் பச்சை எனும் குணம் சொல்லப்பட்டது என்பதூஉம், அப்பச்சைச்சொல்லே இலையாதியனவற்றின் நிறத்தைவிளக்குதற்கு ஆகுபெயராய்வரலாயிற்று என்பதூஉம் தேற்றமாம். பசை எனுஞ் சொல் பிசைதல் நெருக்குதல் எனும் அர்த்தத்தில் பசி, பசலை, பையுள் (நோய், தொல்காப்-சொல். 341), பைதல், பை எனும் உருவங்களும் கொள்ளும். அதுதான் பயிலல் (=நெருக்கம், அடுத்துமுயலல்), பயிர்ப்பு (நிறைதலால் உவட்டல்) ஆதிய உருவங்களையும் அடையும். இவற்றை ஈண்டு விரிப்பில் மிகப் பெருகுமாதலால் வாசிப்போர் ஆராய்ந்துணர்க.

## சிவப்பு.

எழுதலை ஏறுதல் என்றும் வீசுதலை எறிதல், எறித்தல் என்றும் பெயரிட்டழைத்த எந் தமிழ்முன்னோர், ஏறி வீசுகின்ற அனலை "எரி" எனக் கூறிப்போந்தார். ஏறிவீசுவது எரி; அதன் வீசுதல் எரிதல். எரிதலுக்கு "எறிப்பு" எனும் பெயரும் உளதாயிற்று. வெயில் எரிகின்றது, வெயில் எறிக்கின்றது எனும் இவை யிரு சொற்றொடர்களும் பொருள் ஒத்தவை. இனி எறிப்பு எனுஞ் சொல்லே எம்மால் "தமிழமைப்புற்றவரலாறு" என்னும் நூலினுள் விளக்கப்பெற்றதோர் கட்டளைக்கு இனங்க நெருப்பு என்றாயிற்று. எறிப்பு, நெருப்பு (நெறுப்பு) எனும் சொற்கள் தாம், "நிறம்" எனும் சொல்லினுக்கும் பிறப்பிடமாயின என்பதை ஆராய்ந்துணர்க. எரிப்பு, நெருப்பு என்பவையோடு நெறுதல், நீறுதல் எனும் உருவங்களையும் ஒப்பு நோக்குக.

அப்பால் நெருப்பின் நிறமே சிவப்பு எனப்பட்டது. சிவப்புச்சொல் ஆதியில் சுவப்பு என இருந்ததாதல்வேண்டும். இதனாலன்றோ நெருப்புநிறமான பொன் "சுவணம்" என்னப்பட்டமையும். "எரிபுரை சுவணம்" (பெருங்கதை. 4, 11, 52). செந்நிறத்தைக்குறிக்கும் "துவர்" எனுஞ் சொல்லையும் ஒப்புநோக்குக. "துவர்ச்செவ்வாய்" (கலித்தொகை. 55). அங்ஙனமே சுவண்டு=ஒளி, சுவண்டர்=சிவன் எனும் உருவங்களையும் ஆராய்க. "தூநீறணியும் சுவண்டர்" (அப்பர் தேவா). மலையாளத்திற் சுவக்க, சுவனு=செம்மையாயிருத்தல்; சுவப்பு, சுவன்=சிவந்தது என வருதலு மொன்று.

இனி, சுவப்புச்சொல்லின்வரலாற்றினை விளக்குதும்: பகலவனின் பெயராகிய "எல்" என்னும் சொல்லினின்றும் வெள்ளைச்சொல் பிறந்தமையைக் கண்டாமன்றோ. வகரமெய் சொன்முதலாயினமையாலும் லகரம் ளகரமாயினமையாலும் வெள்ளைச்சொல் வந்தவாறு, "எல்"லின் எகரவுயிர் ஒகரமாயினமையால் ஒலிச்சொல்லும், அந்த லகரம் ளகரமாயினமையால் ஒளிச்சொல்லும் பிறந்தன. "நின்றுடை யொலிப்ப" (கலித். 81). ஈண்டு விளக்குதற் பொருள். "வெஞ்சுடர் ஒ்ளியுநீ" (பரிபாடல். 3. 67). ஈண்டு எரித்தற்பொருள். ஒலித்தலும், ஒளியும் சொலி=விளங்கு எரி என்றும், அச் சொலிதான் சுல்=வெள்ளி; சுல்லி=அடுப்பு; சுள்ளு=சூடு; சுடு=எரி; சுடர்=பகலவன்; சுடலை, சுலிகை=நெருப்பெரியுமிடம், சுளுந்து, சுள், சூள்=நெருப்புக்கொள்ளி, சுள்ளை, சூளை, சுவாலை=பெருநெருப்பு; சுண்டு, சுண்டல்=நெருப்பிற்காய்ந்தது; சுண்ணம், சுண்ணம்பு=நெருப்பினால் (நெருப்பு) ஆகிய நீறு; சுவண்டு=சூடு; சுவடு=நெருப்புச்சுட்டபுண்; சுவறு, சோடை, சோர்=அனலாற் காய்ந்து வற்றல் என இவ்வாறு வெவ்வேறு உருவங்கள் தாங்கிச் சுவப்பு என்றாயிற்று. ஆரியம் ஆகிய பிறமொழிகளின் சொற்கள் பல இவ்வடியாய்ப் பிறந்திருத்தலை முன் சுட்டிய எமது நூலினுட் பாக்கக் காண்க.

சுவப்புச்சொல் சிவப்பு என நின்றவிடத்துச் செம்மை; செய்ய=சிவந்த; சேப்பு; செம்பு=சிவந்தலோகம்; சேய்=சிவப்பு; சிவம்=நன்மை ஆதிய பல சொற்களாய்த் திரியலுற்றது. கன்னடத்தில் செம், செந் என்பது சந் எனவும் நிற்கும். அதில் சம்பு எமது செம்புச்சொல்லாம். சந்த=சுவந்த, ஒளிபொருந்திய, அழகிய என்றாகும். அம்புலிமானின் பெயரும் அது. இவற்றால், சந்திர எனும் ஆரியச்சொல்லும் தமிழடியாய்ப்பிறந்ததே எனத் தோன்றும். இவ்வாறே சுவர்ண, சூர்ண, ஜ்வால ஆதிய ஆரியச்சொற்களும் தமிழடியாய் எழுந்தன என்பது முன் காட்டிய வரலாற்றினால் வெள்ளிடை விலங்கலாம். இவை யாவும் ஒருகாலம் வெளிப்படவிருக்கின்ற எமது "சொற்பிறப்பகராதி" யினுட் டெளிவாக்கப்படுவன.

நீலம்.

வெள்ளைநிறச்சொல் எந்த அடியாய்ப்பிறந்ததோ, அந்த "எல்" அடியாகவே நீலநிறச்சொல்லும் பிறந்திட்டது என யாம் சொல்லக்கேட்டல் பல்லோர்க்குப் புதுமையாகத்தோன்றலாம். ஆயினும் "வெள்ளை" எல்லின் மகவாம் என்பதற்குள்ள இலக்கியச்சான்று "நீலம்" எல்லின் மகவாம் என்பதற்கும் உண்டு. அஃது தென்னனமென இனி விளக்குதும்.

தமிழ்ச்சொற்கள், ஒருசிலவேயான தலையடிகளினின்று விகற்பித்துப் பலவாக்கப்பட்ட வழிகளுள் ஒன்று யாதெனில், உயிர்முதலாய் நின்ற சொற்களின் தலையில் ஒவ்வோர் மெய் நிறுவி அவ்வச்சொல்லை உறுதிபெறச்செய்தமையாம் என்றல் முன்னரும் தெரிக்கப்பட்டது. இங்ஙனமே "எல்" அடியான எழில் எனும் சொல் கெழு, கேள் எனத் தெளி, திகழ் என உறுப்பேற்பாடடைந்து ஒளியுடைமையின் வெவ்வேறு படிகளை, நோக்குக்களை உணர்த்துவதாயிற்று. உயிர்முதலாய்நின்ற "எழில்" கேவலம் ஒளியுடைமையை, அழகைக் குறிக்க, ககரமெய் முதல்பெற்ற "கெழு" உறைத்தபிரகாசத்தை, தகரமெய் முதல்பெற்ற 'தெளி' நன்றாய் விளங்குதலைக் காட்டுவனவாயின. "கேழ்" கெழுவின் வேறோர் உருவமும் "திகழ்" தெளிவின் மற்றோர் வடிவமுமாம். முன்னையது தலைநீண்டது. பின்னையது தலைமடிந்து விரிந்தது. தோய்த்தல் துவைத்தல் எனவும், தாவுதல் தவழ்தல் எனவும், தாழ்தல் தளர்தல் எனவும் வருதல் பின்னையதனைப்போன்ற விரிதலுக்கு எடுத்துக்

காட்டுக்களாம். இனி, மெய் தலையிற்பெறும் சொற்களுள், வலிமை கொண்டு உச்சரிக்கப்படும் மெய்ம்முதலானவை வலிமையோடுகூடிய அர்த்தத்தையும், மென்மையாய் உச்சரிக்கப்படும் மெய்ம்முதலானவை மென்மையோடுகூடிய அர்த்தத்தையும் கொண்டு இயலுதலும் உற்று நோக்கற்பாலது. எங்ஙனம்? உழை எனும் முதற்சொல்லினின்றும் பிறந்த துளை எனும் வழிச்சொல், தகரமாகிய வல்லினமெய்ம் முதலானமையால் வலிமையோடுகூடி ஊடறுத்துச்செல்லுதலை விளக்கும். அம் முதற்சொல்லினின்றே வருகின்ற நுழை எனும் வழிச்சொல், தன் தலைநின்ற மெய்யின் மென்மையால், மெல்லென உட்செல்லுதலைக் காட்டும். இங்ஙனமே, தோண்டுதல் வலிமையோடு இடந்து துவாரம்பொறித்தலாம். நோண்டுதலோ மென்மையாய் யாதொன்றைப் பிரித்து அகழ்தலாம். இவற்றின் விரிவைத் "தமிழமைப்புற்ற வாலாறு" எனும் நூலின் நான்காம் அதிகாரத்தினுட் கண்டு தெளிக.

இனி நீலச்சொல்லின் வாலாறு இது:- எல் எனும் சூரிய, வெளிச்சப்பொருள்கொண்ட சொல் தன் எகரத்தைப் பிறப்பொத்த இகரமாய் மாற்றி இல-கு, இல-ங்கு என நின்று, வெளிச்சமபமாய்த் தோன்றுதலைக் குறித்தது. "இலங்கு" என்பதுதான் தகரமெய்ம்முதலிற்பெற்று, துலங்கு, துளங்கு, எனவும் வருவது. தரா இகரம் உகரமானமை இங்கு ஓர் ஒலிமாற்றமாம். துலங்குதல் = மிகப் பிரகாசித்தல். துளங்குதலும் அது. அப்பால் "இலங்கு" என்பதுதான் விலங்கு, விளங்கு எனவும் வருவது. விலங்கல் = விளக்கமாய் எழுந்துநிற்பது, மலை. ஸம்ஸ்கிருதத்தில் உப்பரிகை, உயர்ச்சி எனும்பொருளுள்ள விடங்கச் சொல்லும் அது. லகர, ளகர, டகரங்கள் இனமாற்று. இவைபோலவே நகரமெய் தலையிற்பெய்த இலகு நிலவு என்றாகி மென்மையான, மங்கலான வெளிச்சத்தைக் குறிப்பதாயிற்று. இதனால் "நிலவு" சந்திரனின் மெல்லொளிக்குப் பெயரீடாயிற்று. இந்நிலவுச்சொல் சிங்களத்தில் நிலாவ என நின்று மங்கல் ஒளியோடுகூடிய நீலநிறத்தைக்காட்டும். நிலவு, நிலாவ என்பனவே ஸம்ஸ்கிருதத்தில் நீல எனவும், லத்தீனில் நீகர் எனவும், கிரேக்கத்தில் மேலஸ் எனவும் வந்து இருண்டநிறத்தைக் குறிக்கும் என ஆராய்ந்து கண்டு மகிழ்க.

## மஞ்சல்.

குன்றிய விளக்கமானது நிலா, நீலம் எனப்பட்டமைபோல, மழுங்கிய சிவப்பு மஞ்சல் அன்றேல் மஞ்சள் எனப்பட்டது. மங்கலே மஞ்சலாயிற்று. தங்கல் தஞ்சம் எனவும் இறங்குதல் இறைஞ்சுதல் எனவும் வந்தவாறுபோல. செங்கல்மங்கல் என்ற தொடரிலும், செங்க(ண்)மாரி, மங்க(ல்) மாரி எனும் தொடர்களிலும் மங்கற்சொல் மஞ்சட்சொல்லினுக்குச் சரியாய்நிற்றல் காண்க. "மங்கல்" இலக்கியங்களுள் மங்குல் எனப் பயின்று, மழுங்கிய ஒளியை, இருட்சியைப் புலப்படுத்தும். "மங்குல் வானத்து மதிநிலா மழுங்க" என்பது பெருங்கதை (உஞ்சைக். 50, 55). உள்ளபடி, ஒளிமழுங்கியதே மங்குலாம். மங்குற்சொல்லினுக்கு மேகப்பொருள் இருட்சியை வாயிலாகக்கொண்டு பெறப்பட்டது. அப்பால் மழுங்குதலும் மழுகுதலும் ஒன்று. "பசுங்கதிர் மழுகிய சிவந்து வாங் கந்தி"என்ற புறநானூற்றுமேற்கோளை (376, 2) முன்னைப் பெருங்கதை மேற்கோளோடு ஒப்புநோக்கி மகிழ்க. மங்கல்தான் ஒளிமழுக்கத்தை மேலும் வலியுறுத்துமுகத்தால், சொன்முதல் மெல்லினத்தினிடமாய் வல்லினம்பெற்றுக் கங்குல் என வந்ததுபோலும். கங்குல்= கதித்த ஒளிமழுக்கமாகிய இருள், இரவு எனக.

"மஞ்சல்" மங்கற்சொல்லினின்று வந்ததேயாயின், இச்சொல்லினுக்குத்தான் பிறப்பியாது? எனிற் கூறுதும்:—'மங்கல்' மழுங்கலின் மரூஉவாம். மழுங்கல் எனும் சொல்லின் தலையில் மெய் விளங்குகினறமைபால் இது ஓர் வழிச்சொல்லே என்பது "தமிழமைப்புற்ற வாலாறு"என்னும் நூலைப் படித்தோர்க்குத் தெற்றெனப் புலப்படும். இதன் முதற்சொல்லுருவம் அழுங்கல் என்பது. இவ்வுருவந் தானே ஓர் முதற் சொல்லன்று, ஆயின் ஆழ்தல் (அகலல்) எனும் முதற்சொல்லின் ஓர் வேற்றுமையாவது. "ஆழ்" அழ(கு) என நின்று அழுக்கு என்றுயிற்று. ஆழ்தலின்பொருள் கீழ்நோக்கிச்செல்லல், இறங்குத லென்பது. ஆழ்தலின் வழிவந்த அழுங்கலும் முதற்கண் கீழ்நோக்கிச் செல்லுதலை, இறங்குதலையே குறிக்கும். "அருமாலுற்று...... அழுங்கி அரற்றுதே" (திருவாசகம் 15, 50). பிறனொருவனின் தாழ்நிலைநோக்கித் தானும் உள்ளத்தால் இறங்குதலே இரங்குதலாதலால், அழுங்கல், மேல், இரக்கத்துக்கும் பெயராயிற்று. "பெருங்களிறு........சேர்ந்தல்கிய

அழுங்கல் ஆலை" எனும் ஆட்சி காண்க (புறநா. 220, 3). இங்கு இறங்குதல் இரங்குதல் ஆவதின்கண், றகரம் தன்னோடு பிறப்பொத்த ரகரமாய் மாறியமையால், பொருள் ஒரு சிறிது வேற்றுமைப்பட்ட புதுச் சொல் ஒன்று ஏற்பட்ட பெற்றியைக் குறித்துக்கொள்க. இது சொல்லமைப்பின்கண் தொழிற்படும் பெருங்கட்டளைகளுள் ஒன்றும். அப்பால் அழுங்கல் மேனிலையினின்றும் இழிதலாகிய கேட்டிற்கும் பெயராயிற்று; "பிணனழுங்கக் களனுழக்கி" என்றதிற்போல (புறநா. 98, 5). தாழ்ந் தோர்மாட்டு இறங்குதலாகிய இரக்கமும் மேனிலையினின்று இறங்குதலாகிய கேடும் ஆகிய இருபொருளும் அழுங்கற்சொல்லினுக்குண்மையை எடுத்தோதி: "அழுங்க லிரக்கமுங் கேடு மாகும்" என்றார் தொல்காப்பியனாரும் (சொல்லதிகாரம் 350). அழுந்துதலும் அமிழ்ந்துதலும் அழுந்துதலின் வேறு வேறு உருவங்களாம். அமிழ்ந்துதல் ஆழ்தலே என்பது வெளிப்படை. அழுந்துதலுக்கும் அப்பொருளே தலையாகின்றமையை "அழுந்தேனரகத்து" (திருக்கோவை 169) முதலாம் எடுத்துக்காட்டுக்கள் வலியுறுத்தும். அழுகுதல்=கெடுதல், அழுங்குதலின் பிறிதோர் விகற்பமாம்.

அழுங்குதலினின்றும் பிறந்த வழிச்சொற்கள் நழுவுதல், வழுவுதல், மழுகுதல் அன்றேல் மழுங்குதல், மங்குதல் என்பவை மெல்லின மெய்ம் முதலானவை யெனவே, எல்லாம் மெல்லெனக் கீழ்நோக்குதலை, குறைதலை, தேய்தலை விளக்குவன. நாம் இங்கு ஆராய எடுத்துக்கொண்ட மங்குதல் என்னும் சொல் ஆரியத்திலே நீரில் அமிழ்ந்துதல் எனும் பொருள்தங்கு மஜ்ஜ் என நிற்றல் ஈண்டு நோக்கற்பாற்று. அம்மொழி மஜ்ஜனம்=நீரில் அமிழ்ந்தல், மூழ்கல் என வரும். மஞ்சனமு மது. "மஞ்சம்" தூங்குதல், தொங்குதல், எனும் சிறப்பியல்பு நோக்கிக் கட்டிலின்பெயராயிற்றுப்போலும். ஆயின் வடமொழியில் மஜ்ஜ் எனும் அடியாய்ப் பிறந்த மஞ்சல்நிறச்சொல் இன்று, அந்நிறத்தைக்குறிக்கும் ஹரித, பீத ஆகிய சொற்கள் வேறு தமிழடிகளினின்றும் தோன்றின. சொல்லிய இரண்டனுள்ளும் முந்தியது கெழு எனும் தமிழ்ச்சொல்லையும், பிந்தியது பிசை (பசை) எனும் தமிழ்ச்சொல்லையும் பிறப்பிடமாய்க் கொள்வன. இத்துறை இவண் விரிப்பின் வரம்பிகந்துசெல்லும். பாராயணர்கள் ஆராய்ந்துணர்க.

நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்.

# சிலா லேகைகளும் அவைகளின் பாதுகாப்பின் அவசியமும்.

ஒரு தேசத்தின் பெருமையும், நாகரீகத்தின் மேன்மையும் தெரிய வேண்டின், அத்தேசத்தாரின் முன்னோர்களுடைய பாஷை, அவர்கள் எழுதிய கிரந்தங்கள், கற்சிலைகள், இதர சித்திரங்கள் உருவ படங்கள், நாணயங்கள், கோயில் முதலிய சட்டிடங்கள் இவைகளை நன்குணர்வது அவசியம்.

உலகத்தில் முன்னேற்றமடையவேண்டுமென்ற உணர்ச்சியுள்ள நாடுகளெல்லாம் தங்கள் நாட்டிலும் இதர நாடுகளிலும் இவ்வித நாகரீகச் சின்னங்களைச் சேகரிப்பதும், அவைகளின் உட்கருத்தை அறிவதும், உலகத்தாருக்கு அதைப் பிரசாரம் செய்து வெளிப்படுத்துவதுமாய் முயல்கிறார்கள்.

லண்டன் (London), பாரிஸ் (Paris), பர்லின் (Berlin), பாஸ்டன் (Boston) கண்காட்சிச் சாலைகளில் சேகரிக்கப்பட்டிருக்கும் பொருள்களுக்கு அளவில்லை.

தற்காலத்தில் இவ்விஷயங்களில் நமக்கு ஊக்கம் ஏற்படுத்தியது ஐரோப்பியர்களே. ஆங்கிலேயர்கள் இந்தியாவோடு வியாபாரம் செய்ய வந்தார்கள் கொஞ்சம் கொஞ்சமாய் இராஜ்பாதிகாரம் பெற்றார்கள். ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரை ஆளுவது சுலபமல்ல. அரசாங்க வர்க்கத்தினர் குடிகளின் ஸ்திதியையும் அவர்களின் ஸ்தாபனங்கள் (Institutions) மதக்கொள்கைகள், பாஷைகள், நூல்கள், சட்டங்கள், பழக்கவழக்கங்கள் இவைகளைக் கற்க ஆரம்பித்தனர்.

1784-ம் வருஷம் இந்திய பாஷை நாகரீகம் முதலியவைகளில் ஊக்கமுடையவர்களான S. W. Jones, H. T. Cobbrooke இவர்கள் Society of Bengal என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்திய நாகரீக சம்பந்தமான விஷயங்களில் ஊக்கம் ஏற்படுத்துவதும், மாதாந்திரப் பத்திரிகை மூலமாய் அவ்வபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதும் இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் இது நாளதுவரை நடைபெற்று வருகிறது.

19-ம் நூற்றாண்டில் James Prinsep என்பவர் நாணய ஆபீசில் வேலைபார்த்துவந்த ஆங்கிலேயப் பிரபு. அவர் சமஸ்கிருத பாஷையில் அபிமானமுடையவர். Greco-Bactrian (coins) நாணயங்களில் கிரீக் பாஷை, பாலி ஆகிய இரு பாஷைகளில் எழுதப்பட்டிருந்த வாசகங்களைப்படித்தார். பிறகு பாலிபாஷையில் (பிராமிலிபியில்) எழுதப் பட்டிருந்த Allahabad, Girmar முதலிய இடங்களிலுள்ள அசோகர் கல்வெட்டுகளைப் படித்தார். சுமார் 2000 வருஷங்களாக மறைபொருளாகக் கிடந்த அரிய விஷயங்களை உயிர்ப்பித்தார்.

இதேகாலத்தில் கன்னிங்யாம் (Sir Alexander Cunningham) என்ற இஞ்சினீயர் ஒருவர் இருந்தார் வட இந்தியாவில் தன் உத்தியோக முறைமையில் கவனக்குறைவால் அழிகின்ற அநேக நேர்த்தியான கட்டிடங்களை பார்க்கநேர்ந்தது. அவர் 1861 வருஷத்தில் பின் வருமாறு இந்தியா கவர்மெண்டாருக்கு எழுதினர்.

"பிரிட்டிஷ் ராஜ்யம் ஸ்தாபனம் ஆகி 100 வருஷமாகியும், ஸர்க்கார் தேசத்தின் பூர்வீக கட்டிடங்கள், சித்திரங்கள் முதலிய சிற்பங்களைப் பாதுகாக்க யாதொரு முயற்சியும் செய்யவில்லை. எழுதப்பட்ட சரித்திரம் (Written History) இல்லாத இத்தேசத்திற்கு இவைகளே தேசப்பூர்வீக நிலைமையை விளக்கக்கூடிய சிறந்த ஆதாரங்களாகும். இச்சிற்பங்கள் அளவுக்கு உட்படாத காலங்களாய் இருந்துவருகின்றன. இன்னும் ஆயிரக்கணக்கான வருஷங்கள் நீடித்திருக்கலாம். ஆனால் காலக்கிரமத்தில் எல்லாம் அழியுமாதலால் சிற்பசாஸ்திரிகளின் வர்ணனையையும் இவைகளின உருவப்படங்களையுங்கொண்டே பின் சந்ததியார்களுக்கு நாம் அவைகளைக்காப்பாற்றி வைக்கமுடியும். இம்முயற்சி செய்யாவிடில் எல்லாம் பாழாய்விடும்."

இவருடைய அபிப்பிராயத்திற்கு இணங்கி இந்தியா கவர்மெண்டார் இவரையே Archaeological Surveyor ஆக நியமித்தார். அவர் 1861—5 வருஷப் 1870—85-ல் வடஇந்தியாவிலுள்ள முக்கிய ஸ்தலங்களைச் சர்வேசெய்து ரிபோர்ட்டுகள் பிரசுரம் செய்தார்.

இதே மாதிரி தென் இந்தியாவுக்கு 1881 வருஷம் J. Burgessம், பிறகு R. Sewellம் சர்வேயராக நியமிக்கப்பட்டார்கள். Swellன் List of the Antiquities of the Madras Presidency என்ற இரண்டு

(2 volumes) ரிபோர்ட்டுகளும் மிகவும் உபயோகமுள்ளவை. கோயில்கள், சிற்பங்கள், உள்ள ஒவ்வொரு ஸ்தலத்தைப்பற்றியும் ஜில்லாவாகவும் ஊராகவும் பிரித்து அவைகளின் விசேஷத்தையும் எழுதியிருக்கிறார். S. W. Elliotம் (also collected texts of 595 inscriptions) Col Mackenzie (8076 inscriptions) நாணயங்கள், சாஸனங்கள், கல்வெட்டுகளின் பிரதிகள் இவைகளைச் சேகரித்தார்.

1887-வருஷத்தில் சென்னை கவர்மெண்டார் Hultzsch என்ற ஜெர்மன் துரையை சிலாலேகைப் பண்டிதராக நியமித்தனர். அது முதல் விடாமுயற்சியோடு தென்னிந்தியாவிலுள்ள கல்வெட்டுகளின் பிரதிகள் எடுத்து அவைகளின் அரிய பொருள்களை வெளியிட்டனர். அவர்காலத்தே கோயில் திருப்பணிகளாலும், ஜனங்களின் சிரத்தைக் குறைவாலும் அநேக கல்வெட்டுகள் அழிந்தன. இன்னும் அழிகின்றன. இவ்விதமழிந்தது போக எஞ்சியவைகளில் சேகரித்த கல்வெட்டுகள் 1917ஹு வரை 10,000 ஆயின. அதற்குப்பிறகு 2, 3 ஆயிரங்களுக்குக்குறைவில்லை. சேகரித்துவைத்தவைகளைப் பிரசுரம் செய்ய ஆரம்பித்தனர். 43 வருஷங்களாய் சேகரிக்கப்பட்ட கல்வெட்டுகளில் ஒரு சிறு பாகந்தான் வெளிவந்திருக்கின்றன. பிரசுரம் செய்வதில் அதிக காலதாமதம் ஆகிறதென்று ஆக்ஷேபங்கள் ஏற்படவே, ஸர்காரில் சென்ற 3 வருஷங்களாய் வருஷம் ஒன்றுக்கு 1000 கல்வெட்டுகள் வீதம் பிரசுரம் செய்யவேணுமென்று உத்திரவு செய்தனர்.

## சிலாலேகைகள்.

சிலாலேகை என்ற பதம் ஸ்தம்பங்கள், செப்பேடுகள், கற்றூண்டுகள், பாறைகள், சுவர்கள், குகைகள், கோயில் மதில்கள், பாத்திரங்கள், மரத்துண்டுகள், ஓலைகள், மற்ற இலைகள், மரப்பட்டைகள், காய்ந்த களிமண்பரைகள், சிலைகளின் பாதங்கள், முதலிய இடங்களில் எழுத்தால் எழுதியோ, வருணத்தால் சித்திரம்போல் வரைந்தோ, முத்திரைபோட்டோ, உளியால் செதுக்கியோ வரையப்பட்டிருக்கும் லிபியைக்குறிக்கும்.

சிலா சாஸனங்களின்மூலம் அநேகமாய் ஓலைகளிலும் அவைகளின் நகல்கள் செப்பேடுகளிலும், கல்லிலும் இருந்திருக்கவேண்டும். அநேக கல்வெட்டுக்களுள் "துல்யம்" என்று முடிகிறதிலிருந்து அது சரியான நகல் என்றும் மூலசாஸனம் வேறு இருக்கவேண்டுமென்றும் கருதப்படுகிறது.

இக்கல்வெட்டுக்கள் சாசுவதமாய் நீடித்திருக்கவேண்டுமென்ற நோக்கத்தால் அத்தர்மம் யாவர்க்கும் தெரியும்பொருட்டும், ஏற்படுத்தும் தர்மம் அழியாதிருக்கும்பொருட்டும், பாறைகளிலும் கோயில் முதலிய பொது ஸ்தலங்களிலும் கற்களிலோ கற்சுவர்களிலோ வரைந்தனர். காலக்கிரமத்தில் எழுதிய எழுத்தும் சிதைவு அடைந்தாலோ அல்லது கோயிலைப் புதுப்பிக்கும் காலத்திலோ அச்சுவர்களின் மீதுள்ள பூர்வ கல்வெட்டுகளைப் புத்தகத்தில் பதிந்துகொண்டு பிறகு திருப்பணி முடிந்ததும் தக்க உத்தியோகஸ்தர்களின் முன்னிலையில் புதுச்சுவர்களில் பழைய கல்வெட்டுக்களை வெட்டிவைப்பது வழக்கம். பின்வரும் உதாரணத்திலிருந்து இது தெளிவாகும்.

"ஸ்ரீ ராஜராஜதேவற்கு யாண்டு 28-வது நாள் 36-நாள் வடகரை ராஜேந்திர சிம்மவளநாட்டுப் பொய்கை நாட்டு தேவதானம் திருமழுவாடியுடையார் ஸ்ரீ விமானம் வாங்கி திருக்கற்றளி யெடுக்கவென்று உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் அருளிச்செய்ய திருக்கற்றளி எடுக்க ஸ்ரீ விமானம் வாங்கி இ ஸ்ரீ விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சேர்ப்பிக்கவென்று" அதிகாரிகள் சொல்ல........................................ "மேற்படி உடையார் விமானம் முன் வாங்கிச்செய்கிறபோது இவ்விமானத்துள்ள கற்படி மாற்று சேர்த்த புத்தகப்படி மீளக்கல்வெட்டுவிக்கவென்று தண்ட நாயக்கன் உத்தம சோழ பிரம்ம ராயன் ஓலை தமக்காக இத்தேவர்க்கு ஸ்ரீ கார்யம் செய்கிற குளவன் சோழனுக்கும், பிச்சனுக்கும், தேவர் கன்மிகளுக்கும் இன்னாட்டு ஸ்ரீ கண்டராதித்த சதுர்வேதி மங்கலத்து சபையார்க்கும் பெரும்புலியூர் சபையார்க்கும் ஓலை வரக்காட்ட........................இவ்வனைவர் கண்காணிப்பாலும் இவ்வனைவர் கணக்கினாலும் கல்வெட்டுவிதிப் படி முன்பு கல்வெட்டுச் சேர்த்த புத்தகப்படி........................" கல்வெட்டப்பட்டது. இதை ஆங்கில அரசாட்சிக்கு முன்னிருந்த தென்னிந்திய அரசர்கள் யாவரும் கையாண்டு வந்தார்கள். சென்ற 200 வருஷங்களாக இப்பழக்கத்தை நாம் மறந்துவிட்டோம்.

நம் நாட்டில் தற்காலத்தில் கவனக்குறைவால் ஆயிரக்கணக்கான பழைய நாகரீகச் சின்னங்கள் அழிகின்றன. ஏடுகளோ, கல்வெட்டுக்களோ, விக்கிரகங்களோ அளவிறந்தன நாடெங்கும் இருந்தும் அவைகளின் உபயோகமும் அருமையும் தெரியாமல் நாசமடையவிடுகிறோம். இனியாவது இக்குற்றம் நம்மைச்சாராவண்ணம் முயல்வது அவசியமென்றும் நம் கடமையென்றும் கருதுகிறோம்.

*Chidambaram,*
26—12—'30. S. R. BALASUBRAHMANYAM, B.A., L.T.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உருஉ-ம் பக்கத்தொடர்ச்சி.]

## வாலி வதைப்படலம்.

### இராமன் வாலியைக்கொன்றதைக் கூறுவது.

### சுக்கிரீவன் போருக்கழைக்க, வாலி புறப்படத், தாரை* தடுத்தல்.

[இராமன் சுக்கிரீவனை நோக்கி "நீ வாலியைப் போருக் கழைத்து வந்து போர்செய்யும்போது மறைந்துநின்று வாளி எய்து அவனைக் கொல்வது தக்கதென்பது யான் தீர்க்கமாக ஆலோசித்துச் செய்த முடிவு" என்றான். தன் தமயனை எவ்வாற்றானும் கொல்லும் நோக்க முடைய சுக்கிரீவன், அதற்கிசைந்துசென்று, வாலிகாதுள் மோதும் படி "போர்க்குப் புறப்படு, போர்க்குப் புறப்படு" என்று ஆர்ப்பரித்து, இடியிடித்தாற்போலத் தோள்புடைத்துத், தொடைதட்டி வீர ஆரவாரம் செய்தான். அந்த ஆரவாரம், குகைக்குள் உறங்கும் சிங்கத்தின் செவி யுள்ளே வெளியிலிருந்து பிளிறுகின்ற யானை முழக்கம் புகுந்தாற்போல, மாளிகைக்குள்ளே வெண்மலர் மெத்தைமீதே, வெள்ளிய பாற்கடலில் வெள்ளியங்கிரிபோற்கிடந்து விழிதுயிலும் வாலி காதுள் நுழைந்தது. நுழையவே, அவன் ஆச்சர்யமடைந்து, 'ஒளித்துப் பிழைத்திருந்தவன் வெளிப்பட்டுவந்தது நன்றாயிருக்கின்றது' என்று, இகழ்ச்சிக்குறிப்பு வெளிப்படச் சிரித்து 'இதோ! வந்து விட்டேன்' என்று உரத்து உரைத்த ஓசை அட்டதிக்கும் முட்ட, வீறுகொண்டு விரைந்தெழுந்த போது, அவன் மனைவி தாரை தடுக்க, "விடு விடு, விலக்காதே, அஞ்சாது அறைகூவியவன் ஆவியை அரைக்கணத்தில் உண்டு மீள்வேன்" என "உன் தோள்வலிக்கு ஆற்றாது தோற்றோடியவன் புதுவலிமை பெறவில்லை, மறு சனனமும் உறவில்லை. அப்படியிருக்க இப்பொழுது வலிந்து போர்க்கு வந்தது வலிமிகுத்த துணை படைத்தமையால்" என, "அவனுக்காக மூன்றுலகத்தோரும் ஒன்றுக்கொண்டுவந்து என்னை எதிர்த்தாலும், அவர்களனைவரும் தோற்று ஓடுதல் தெற்றமானது.

* தாரை - வாலி மனைவி.

ஆதலால், ஒருவரும் அவனுக்குத்துணையாக வாரார். எவரேனும் வருவாரெனில், அவர் பலத்திற் பாதி எனக்குச் சேரும். என் பலத்தோடு அவர்தம் பலத்திற் பாதியும் அடைந்த என்னை அவர்கள் எவ்வாறு வெல்வார்கள்"? என, "இராமனென்பவன் அவனுக்கு உயிர்த் துணைவனாகி உன்னைக்கொல்ல உடன்வந்துள்ளானென, உண்மையன்புடையா ருள வறிந்துரைத்தனர்" என, "அடி, பாவி! அந்த ஆண்டகை திறத்தில் அடாதது கூறி அபசாரப்பட்டுவிட்டாய்! அவனி மாந்தர்க்கு அறநெறிகள் இவைகளென அவைகளை அநுட்டித்துக்காட்ட அவதரித்திருக்கிற அறக்கடவுளான அவன்' இருவர் பொரும் போரில் இடையே புகுந்து ஓரவாரமாக ஒருவருக்கு உதவிசெய்வானென்று, பெரிய பேதைமைப் பெண்மதியாற்கூறிப் பிழைபாடு பெரிதுடையை ஆனாய். மாற்றாந்தாய் வார்த்தைப்படி தம்பிக்குத் தன் அரசப்பெருஞ்செல்வம் அனைத்தையும் அகமகிழ்ந்து அளித்துத் 'தம்பிய ரல்லது தனக்கு வேருயிர்' இல்லாத சகோதரவாஞ்சை வடிவமானவன், யானும் என் தம்பியும் போர்புரியும் போது என்மீது அம்பு விடுவானோ! சிறிதுபோது பொறுதியோடிரு. இமைக்குமுன் சென்று, அவனையும் அவனுடன்வந்தாரையும் கொன்று திரும்புவேன்" என்றான். அவள் அச்சத்தால் மறுத்துரை வழங்க மாட்டாதவளானாள்.

தாரை தடையை மீறிவந்த வாலி வடிவை இராமன் வியத்தல்.

மலையினின்று புறப்பட்டுச் சுக்கிரீவனெதிரே தோன்றிய வாலி, தூணினின்று வெளிப்பட்டு இரணியனெதிரே தோன்றிய நரசிங்கம் போலநின்றான். அப்போது, இராமன், அவன் தோற்றங்கண்டு ஆச்சரியங்கொண்டு, இலக்குமணனை நோக்கித் "தம்பி, இவனை நன்றாகப் பார். மானவர் வானவர் தானவர் ஏனவர்* யாவரும் இவனுக்கு இணையாகாரென்பது கிடக்க: எந்தக்கடல்தான் எந்தமலைதான் எந்தக்காலாக்கினிதான், இவனை நேரும்? சொல்" என்றான்.

வாலி சுக்கிரீவரைப்பற்றிய இராமலக்குமண சம்வாதம்.
இலக்குமணன் தமயனைப் பகைத்த தம்பியை நம்புதல் தகாதெனல்.

இலக்குமணன் "சுக்கிரீவன், தமயனைக் கொல்லும் இயமனைக் கொண்டுவந்திருக்கின்றான்: சாதாரணமாகத் தூர்த்தர்கள் செய்யும் சண்

*ஏனவர் - மற்றவர்,

டையைச் செய்பவந்தவனல்ல னென்பது என்மனத்தை வருத்துதலால், வாலி மேனி மாண்பை மதித்துணரமாட்டாதிருக்கின்றேன். இன்னும், என் மனம் பொறுக்கமாட்டாது புழுங்குகின்ற ஒன்றைப் புகல்வேன். தருமமூறைதவறித் தம் காரியத்தைச் சாதிக்கமுயல்வாரை நம்புதல் நல்லதல்ல. தனது தமயனைப் பகைவனுகக்கருதிச் சூழ்ச்சிசெய்து மாய்க்கத் துணிந்தவன், மற்றவர் திறத்தில் பற்றுக்கோடாவனே?" என்ருன்.

### இராமன், மனித ஒழுக்கத்தைப்போல வானர ஒழுக்கத்தை மதிப்பிடலாகாதெனல்.

458 "அத்தா, இது கேள்'என, ஆரியன் கூறு வான்:"இப்
பித்தாய விலங்கின் ஒழுக்கினைப் பேச லாமோ?
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தால், பர தன்பெரி துத்தமன் ஆதல் உண்டோ?

இ. ள். "அப்பா, (யான் கூறும்) இதனை (க்கூர்ந்து) கேள்". என்று இராமன் கூறுகின்ருன்: "(பகுத்தறிவுடைய மனிதர் நடக்கைகளைப் பற்றிப் பேசுங்கால், இது நியாயமானது, இது அநியாயமானதென்று பேசுதல்போல,) இந்தப் பகுத்தறிவில்லாத மிருகங் (களான குரங்கு)களின் நடக்கைகளை (ப்பற்றி)ப்பேசுதல் பொருந்துமோ? (மிருக சகோதரருள் தமயனைப் பகைத்த சுக்கிரீவன் கிடக்க; மனிதசகோதரருள்) எல்லாத் தாய்மார் வயிற்றிலும் பிறந்த தம்பிமாரெல்லாம் (தமயன்மாருக்கு அன்புடைமையில்) ஒத்தவர்களாயிருந்தால், பரதன் (தம்பியரெனப்படுவாருள்) சிறந்தவனுவ துண்டோ?

அத்தன்—அப்பன். அன்பு பற்றித் தம்பியை அத்தா என விளித்தது மாபுபற்றிவந்த வழுவமைதி. ஆரியன்—வணங்கப்படத் தக்கவன்; அறிஞன்; தலைவன்; இராமனைக்குறித்தது. பித்தம், அம்—கெட்டுப் பித்து என நின்றது பித்து—(அறிவுத்) தெளிவின்மை—பகுத்தறிவின்மை. ஒழுக்கு, ஒழுகு என்ற முதனிலை திரிந்த தொழிற் பெயர்: அம் சாரியை பெற்று ஒழுக்கம் எனப் பெரும்பான்மையாக வழங்கும்,

தமயன் திறத்தில் பகைமை மிகுந்த சுக்கிரீவனைப் பற்றிப் பேசும்படி நேரவே, தனக்கு அளவற்ற அன்புடைய தம்பிபரதன் ஞாபகம்வர,

இராமன் 'எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்—ஒத்தால், பரதன்பெரி துத்தமன் ஆதல் உண்டோ?' என்றான்.

இங்கே இராமன், தம்பியருள் பரதன் உத்தமனென்றது, பொதுமைபற்றிக் கூறியது; தன் தம்பியருள் பரதன் சிறந்தவனெனக் கருதிக் கூறியதன்று: அக்கருத்துப்படக் கூறியதெனின், அது, சொல்லப்பெற்ற தம்பிக்குக் கேட்கலுற்ற தம்பியைக் கீழாகக் கூறியதாய், அபசாரமாவதேயன்றி, உண்மைவிரோதமுமாம். இராமன், பரத லக்குமணரை இரண்டு கண்கள் போலக் கொண்டு இருவர் பாலும் ஒத்த அன்புடையவன். ஒருகால், ஒருவர்பால் சற்று ஏற்றமான அன்புடையனாயிருந்தால் அவ் வேற்றமான அன்பு இலக்குமணன் பாலதாமென்பது, இராமன் இலக்குமணனைப் பிரிந்து வருந்தியபோது தனக்குத்தானே கூறிய 'என்னைத்தரும் எந்தையை என்னையரைப்—பொன்னைப்பொருகின்ற பொலங்குழையாள்—தன்னைப்பிரிவேன்உளென் ஆவது தான்—உன்னைப் பிரி யாத உயிர்ப்பலவோ' (அயோமுகிப்படலம் ௭௦) என்றதனாலும், பின்பு, திரும்பிவந்து சேர்ந்த இலக்குமணனுக்குக் கூறிய தந்தை தாயர் மற்றைத் தம்பியர் முதலாகப்] 'பிரிபவர் யாவரும் பிரிக, பேரிடர்—வருவன யாவையும் வருக, வார்கழல்—செருவலி வீரநிற் பிரிதலல்லது—பருவரல் என்வயிற் பயிலற் பாலதோ?' (ஷை ௮௯) என்றதனாலும் விளங்குதல் காண்க.

இராமன், பரத லக்குமண ரிருவருள் எவன்பால் ஏற்றமான அன்புடையா னென்பது இயம்பவொண்ணாததுபோல, அவ் விருவருள் யாவன் இராம பத்தி மிக்குடையா னென்பதும் இசைக்கமுடியாததென்பது, இராமன் பதினாலு வருட வனவாச காலம் கழிந்து அயோத்தியை அடைந்தபோது 'அந் நெடுங்கால முழுவதும் தவவேடந் தாங்கி முறையே நாட்டிலிருந்தும் காட்டிலுறைந்தும் இராம சேவைசெய்து இளைத்திருந்த பரத லக்குமண ரிருவரையும் ஒருசேரப் பார்த்த உலகத்தோர், யாருடைய மேனி அதிகமாக நைந்ததென இதயம் நைந்திடலானார்' என்ற பொருளடங்கிய 'காடுறைந் துலைந்த மெய்யோ கையறு கவலை யூரா—நாடுறைந் துலைந்த மெய்யோ நைந்ததென் றுலகம் நைவ' (மீட்சிப்படலம் ௩௪௮) என்றதனால் விளங்கும்.

## இராமன், எவரும் குற்றமற்றவரில்லை, அவரவர்பால் அடையக்கூடிய அநுகூலத்தை அடைதல் அறிவுடைமை எனல்.

459 "விற்றாங்குவெற் பன்ன விலங்கெழில் தோள, மெய்ம்மை
உற்றார்சிலர் அல்லவ ரேபல ரென்ப துண்மை:
பெற்றார்உழைப் பெற்ற பயன்பெறும் பெற்றி யல்லால்
அற்றார்நவை யென்றலுக் காகுநர் ஆர்கொல்?" என்றான்.

இ-ள். "(உலகத்திலே) உண்மையுடையார் (ஒரு) சிலரே (உள்ளார். உண்மையுடையார்) அல்லார் (மிகவும்) பல்லார் என்று (அறிவுடையார்) கூறுவது உண்மை (என்பது உலக அநுபவமுடையார் நன்கறிந்தது). (தமக்குத் துணையாகப்( பெற்றவரிடத்தே (பெறக்) கிடைத்த பிரயோசனத்தைப் (புறக்கணித்து தள்ளிவிடாமல்) பெற்றுக்கொள்ளுந்தன்மை (அறிவுடைமை. அவர் குற்றமே யில்லாதவரா யிருந்தாலன்றி, அவருதவியைப் பெற்றுக்கொள்ளாமை அறிவுடைமையாகாது. உலகத்திலே மிகப்பெரும்பாலார் குற்றமுடையாரே) அல்லாமல் குற்றமற்றாரென்று கூறுதற்கு (தகுதி) ஆனவர் யார் இருக்கின்றார்கள்?" என்றான்.

வில் தாங்கு வெற்பு அன்ன இலங்கு எழில் தோள் — வில்லைத் தாங்கிய (மலையுண்டேல் அம்) மலை போன்ற பிரகாசிக்கின்ற அழகுடைய தோளுடையோனே. உழை - இடம். பெற்றி - தன்மை. ஆகுநர் - ஆகுவார். நகரம் இடை நிலை.

"(வேத சாஸ்திரங்களிற் கூறியபடி) தவறாத நல்லொழுக்கம் பொருந்தியவர் சிலரே: அந் நல்லொழுக்க முடையவரல்லாதவரே பலர்: என்பது உண்மையாகும்; (நாம்) சந்திக்கப் பெற்றவரிடத்தில், நேர்ந்த நற்குணத்தைக் கிரகித்துக்கொள்ளுந்தன்மை யல்லாமல் குற்றமற்றவரென்று சொல்லுதற்கு உரியவர் யாவருளர்? என்று (இராமன் இலக்குமணனை நோக்கிக்) கூறினான்." என்பது முந்திய உரை. "'நெல்லுக்கு குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு—புல்லிதழ் பூவிற்கு முண்டு' என்றபடி குற்றமில்லாதவர் உலகத்தில் அரியராதலால், அவரவரிடமுள்ள குணங்களை மாத்திரம் நாம் கிரகித்துக்கொள்ளவேண்டு மென்று பெருமாள் இளைய பெருமாளுக்குச் சமாதானங் கூறியருளின ரென்பதாம்" என்பதும் முந்திய உரை.

முந்திய பாட்டில், சுக்கிரீவன் தமயனைப் பகைத்தமைக்குச் சமாதானங் கூறிய இராமன், இந்தப் பாட்டில், 'அப்படிப் பகைத் தாலும், சாதாரணமான சண்டை செய்யாமல், பகைவனுக்குக் கூற்றுவனாக ஒரு துணையைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு சூழ்ச்சியான போர் புரிதல் குற்றமானது, அத்தகைய குற்றமுடையவனைத் துணையாகக் கொள்ளக்கூடாது, என்றதற்குச் சமாதானங் கூறினனென்க.

## வாலி சுக்கிரீவ யுத்தம்.

மேலே கூறியவாறு இராம லக்குமணர் வாலி சுக்கிரீவரைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, அவ் இரு வீரரும் எதிர்த்தார்கள். அவர்கள், ஒருவரையொருவர் எதிர்ந்து நின்ற நிலையில், இரு குன்றுகள் எதிரெதிர் நின்றவற்றுக்கு இணையாயினர். இருவோரும், பொருவா ரானபோது, யானையொடு யானையும் யாளியொடு யாளியும் அடர்ப்பன நிகர்த்தனர். ஒருவரை யொருவர் சாரிசுற்றல், குலாலசக்கரச்சுழற்சி நிகர்த்தது. உருமை*மாது பொருட்டுப் பொருதல் புரிபவரான இரு சகோதரும் திலோத்தமை யணங்கு நிமித்தம் செருச்செய்த சுந்தோப சுந்தரென்ற சோதரரிருவரை நேர்ந்தனர். கோபமென்ற ஒரு கொடிய குணம் இருவடிவுகொண்டு ஒன்றோடொன்று பொருதல் போலப் பொருதனர்.

அவர்கள், புரியும் போர்வேகத்தால், மண்மேலுள்ளாரோ, விண்மேலுள்ளாரோ, கண்மேலுள்ளாரோ என்று, காண்போர் கருதாநிற்கப், பொருதார்கள். ஒருவரை யொருவர் குத்தும் ஓசை இடியோசை ஒத்தது. அவர்கள் பல்லினாற் கடித்தும், கையினாற் புடைத்தும், காலால் உதைந்தும், வாலால் வரிந்தும், மலைகொண்டெறிந்தும், மரங்கொண்டறைந்தும், தோல்வி வெல்வி துலங்காமல், நெடும்போது கடும் போர் புரிந்தார்கள். முடிவில், வாலி செயசாலியாகிச் சுக்கிரீவனை நெருக்கியபோது, அவன், தப்பியோடித் தாசரதியிடம் சார்ந்தான்.

## சுக்கிரீவனைத் தரையில் மோதிக் கொல்லத் தலைக்குமேலே தூக்கிய வாலி மார்பில் இராமன் அம்பெய்தல்.

அப்போது, அவன், "சுக்கிரீவ, நீயும் உன் அண்ணனும் ஒத்திருந்தமையால் உனக்கு உதவிசெய்ய ஒண்ணுமற்போயிற்று. வேற்

* உருமை - சுக்கிரீவன் மனைவி.

றுமை தெரிய இந்தக் கொடிப்பூமாலையை அணிந்து செல்" என, மீண்டு சென்றான். சென்றவன், தமயனைத் தாக்க, அவன், தோற்றோடியவன் மீட்டும் வருவானேன்' என்று சந்தேகித்து, இயமனும் பயமுறும்படி சினந்து நோக்கிச், சிறு நகை செய்து, தம்பியின் உயிர்த்தலந்தோறும் ஊக்கத்தோடு தாக்க, அவன், ஆற்றமாட்டானாய் இராமன் இருந்த இடத்தை நோக்கினான். நோக்கிச், செயலின்றித், தியங்கித், திகைத் திருந்த சுக்கிரீவனது சோர்வை வாலி பார்வையுற்று, இதுவே இவனை எடுத்துத்தூக்கி எற்றிக் கொல்லுதற்கேற்ற சமயமென்று, தம்பியின் இடுப்பிலொருகையும் கழுத்திலொருகையுமாகப் பிடித்து எடுத்துத் தன் தலைக்கு மேலாகத் தூக்கியபோது, மறைப்பற்றுத் திறப்புற்ற வாலி மார்பு குறித்து இராமன் வாளிவிடுத்தான்.

மாப்பெரும்பூதங்களின் வன்மை முழுதும் வாய்ந்திருந்த வலிய வாலி மார்பினூடு, வாழைப்பழத்தினுள் ஊசி இறங்குதல்போல, இராம பாணம் எளிதாக நுழைந்தது. கற்பாந்த காலத்திலே, ஊழிப்பெருங் காற்றால் மோதப்பட்டு, நிலை பேர வீழும் மகமேரு நேர, இராமபாணத் தால் தாக்கப்பட்ட வாலி, நிலைகுலைந்து நிலத்தில் விழுந்தான்.

## வாலி, தம்பியைப் பிடித்த கையைத் தளரவிட்டாலும் அம்பினைப் பிடித்த கையை அகலவிடாமை.

469 சையம் வேரொடும் உரும்உறச் சாய்ந்தெனச் சாய்ந்தான்,
வைய மீதிடைக் கிடந்தபோர் அடுதிறல் வாலி,
வெய்ய வன்தரு மதலையை மிடல்கொடு கவரும்
கைநெ கிழ்ந்தனன்; நெகிழ்ந்திலன் கடும்கணை கவர்தல்.

இ-ள். இடி வீழ்ந்ததனால் அடியோடு (பேர்ந்து) மலைவீழ்ந்தாற் போல (நிலைகுலைந்து) வீழ்ந்து பூமிமீது கிடந்தவாலி, சுக்கிரீவனை வலிமையோடு பிடித்த (பிடிநழுவக்) கைநெகிழ்ந்தான் (என்றாலும், அக் கைகளால் தன் நெஞ்சுள் நுழையும்) பாணத்தை அகப்படுத்தும் தொழி லில் (சிறிதும்) நெகிழ்ச்சியுற்றானில்லை.

சையம் - மலை. உரும் - இடி. போர் அடு திறல் வாலி - யுத்தத் தில் (பகைவரைக்) கொல்லும் வல்லமையுடைய வாலி. சாய்ந்தான் முற் றெச்சம். வெய்யவன் தரு மதலை - சூரியன் பெற்ற பிள்ளை - சுக்கிரீவன். மிடல்-வலி-பலம். கவர்தல்-பிடித்தல் (தமிழ்ச் சொல்லகாதி); அகப்

படுத்தல் (தமிழகராதி). 'நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல்' என்பதற்கு 'உக்கிரமான (இராம) பாணம் (தனது உடம்பையும் உயிரையும்) பற்றிய பிடி நெகிழப் பெற்றானில்லை' என்பது முந்திய உரை.

வாலி, சுக்கிரீவனைப் பிடித்த பிடியை நெகிழவிட்டாலும், இராம பாணத்தைப் பிடித்த பிடியை நெகிழவிட்டானில்லை என்ற கவி சமற்காரம் கண்டு களிக்கத்தக்கது.

இங்கே 'நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல்' என்ற பகுதி, பாரதம் பதினேழாம் போர்ச்சருக்கம் உரு௬-ம் பாட்டில், அர்ச்சுனனது அம்பினால் கன்னனுடைய உயிர் போம்போது அவன் 'கைத்தலம் மறந்ததில்லைவிற் குனிப்பும் கடுங்கணை தொடுத்திடும் கணக்கும்' என்ற பகுதியை நினைவுறச் செய்கின்றது. 'கடுங்கணை' என்ற சொற்றொடர் இந்த ஒத்த பகுதிகளிரண்டினும் வருதல் கவனிக்கத்தக்கது.

வாலி, அகப்படுத்திய அம்பைப் பிடுங்க முயன்று வருந்தல்.

[வாலி, தன் மார்பிலே பாய்ந்த பாணத்தை அப்புறம் போகவொட்டாமல் அகப்படுத்தினன். அகப்படுத்தியவன், ஆக்கிரகங்கொண்டு, விண்ணை யிடித்து விழுத்துவேன், மண்ணை வேரோடு பேர்த்துக் கவிழ்த்துவேன் என்பனவாதிய வீர எண்ணங்களெண்ணி, அகப்படுத்தப் பட்டும் அழுந்துதலொழிந்திலாத இதனை எவினேன் யாவனோ என்று ஐயுற்றான். ஐயுற்றவன், எவினவனைக் காணக் கருதிக் கண்கள் கனற்பொறி சிதற அனைத்துத் திசைகளையும் சினத்தோடு நோக்கினன். அந்த அம்பைக் கை கொண்டும் கால் கொண்டும் வால் கொண்டும் தன் முழு வலியினாலும் பறிக்க முயன்றும் பறிக்க முடியாமையால் வருந்தி மலைந்து மலை உருளல்போலப் புரளலுற்றான்.

பின்பு, இதனை எவினோர் தேவரோ எனச் சந்தேகித்துத், தேவர் இத்தனை சத்தியையுடைய இதனை எவுதற்குப் போதிய ஆற்றலுடையாரல்லரென்றெண்ணி, இது பலர் செயலன்று, ஒருவன் செயலே, அவ்வொருவன் தேவ தேவர் மூவரையும் ஒரு சேர ஒப்பான் என்று துணிந்து இந்த ஆயுதந்தான் யாவதோ அறியேன்; இது திருமால் சக்கராயுதமோ, சிவன் சூலாயுதமோ, செவ்வேள் வேலாயுதமும் என் மார்பை உருவும் வலிமையுடையதல்லவே என்று மனம் புழுங்கினன்.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.